காலைக்கதிர்
Kālaikathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 27 செவ்வாய்க்கிழமை 12.11.2019 கதிர் 07

# நாங்கள் தமிழர்கள் ஏன் சஜித் பிரேமதாஸவை ஆரிக்கிறோம்? கோட்டாபய ராஜபக்ஷவை ஏன் நிராகரிக்கிறோம்?

★ அவர் கோட்டாபய போலல்லாமல் ஜனநாயகத்தின் பற்றுறுதி கெண்டவர்; சர்வதிகாரப் போக்கில் செயற்படுபவரல்லர்; அதிகாரத்துவ வாதம், எதேச்சாதிகாரம் போன்றவற்றுக்கு எதிரானவர்.

★ சட்டவாக்கல்துறை, நீதித்துறை உட்பட பிற சேவைத் துறைகள் மற்றும் நிறைவேற்றுத் துறையின் தனித்துவங்களை மதித்துப் போற்றும் பண்பியல்பு கொண்டவர்.

★ அடிப்படை உரிமை மற்றும் மனித உரிமைகளைத் தவறாது மதிப்பவர்.

★ அனைத்து மக்களையும் மதித்தக்கத் தெரித்தவர்; இந்த நாடு தம்மைப் போல் அனைத்து இன, மத, மொழி மக்களுக்கும் உரியது என்ற மாண்பைப் பெரிதும் போற்றுபவர்.

★ ஓர் ஐக்கிய, பிரிக்கப்படாத, பிளவுபடாத நாட்டின் உருவாக்குத்துக்கு நாட்டின் சகல பிரஜைகளும் தேசிய ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும் ஆட்சியில் உண்மையாகவும், இனத்துவ அல்லது மத வேறுபாடுகளைக் கடந்து பங்குபற்றுவதற்கு வழி செய்யும் நோக்கம் கொண்டவர்.

★ நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க ஓர் அரசியல் தீர்வைக் கண்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தொடர்வேன் என்றும் நீதி, நியாயமான – நிலைத்து நிற்கக் கூடிய – தீர்வைக் காண்பதில் பற்றுறுதியாக உள்ளேன் என்றும் வெளிப்படையாகப் பிரதிக்ஞை செய்தவர்.

★ காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், தடுப்புக்காவலில் உள்ளோர் விவகாரம், காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் இலங்கை அரசால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் போன்றவை தொடர்பில் நீதி, நியாயமாகச் செயற்பட்டு தீர்வைத் தருவோம் என சஜித் பிரேமதாஸாவுடன் அவரது அரசியல் இயக்கமும் உறுதி கூறியுள்ளது.



**இவை அனைத்துக்கும் மாறாக பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது அணியினரும் இதுவரை காலமும் நடந்து கொண்டவற்றை நாம் கவனிக்க வேண்டும்.**

★ யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருதல் என்ற பெயரில் தமிழின அழிப்பு யுத்தத்தை கண்மூடித்தனமாக முன்னெடுத்து பல லட்சம் தமிழர்களின் உயிரிழப்பு, அவய இழப்பு, படுகாயங்கள், சொத்திழப்பு உட்பட பேரிழப்புக்களையும் சொல்லொண துன்ப துயரங்களையும் தமிழர் தேசம் மீது ஏவிவிட்டமை.

★ அமரர்கள் ரவிராஜ், ஜோஸப் பரராஜசிங்கம் உட்படப் பல நூறு ஜனநாயகச் செயற்பாட்டாளர்களை அரசியல் படுகொலை செய்த ஓர் அதிகாரபீடத்தை வழி நடத்தியமை.

★ மோசமான மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான யுத்தக் குற்றங்கள் தமிழினத்துக்கு எதிராக இழைக்கப்படுவதற்கான பிரதான சூத்திரதாரிகளாக விளங்கியமை.

★ இலங்கைத் தீவில் தமிழரின் தயாகத்துக்கு நீதி, நியாயமான அதிகாரப் பரவலாக்கல் கிடைப்பதற்கு எதிராக எப்போதுமே பேரினவாதப் போக்கில செயற்பட்டு முட்டுக்கட்டை போடுகின்றமை.

★ அரசமைப்புக்கான 17 ஆவது திருத்தத்தை நீக்கி, 18 ஆவது திருத்தத்தைப் புகுத்தியமை, அதற்காக நாடாளுமன்றத்தை வர்த்தக மையமாக்கி ஆட்டிப் படைத்தமை. அந்தத் திருத்தம் மூலம் காலாதிகாலமாக நாட்டின் ஆட்சியைக் குடும்ப வாரிசுரிமையாக்க முயன்றமை.

★ அரசமைப்புப் பேரவையை இல்லாதொழித்து ஜனநாயக மாட்சிமையை சீர்குலைத்தமை.

★ நீதித்துறை உட்பட அனத்து சேவைத் துறைகளையும் நிறைவேற்றதிகாரம் மூலம் ஆட்டிப்படைத்தமை.

★ பிரதம நீதியரசரை முறையற்ற விதத்தில் பதவியிலிருந்து விரட்டியமை.


★ எதேச்சதிகார, தான்தோன்றித்தனமான இருண்டயுக ஆட்சியின் கீழ் நாட்டை சர்வாதிகாரப் போக்கில் ஆட்டிப்படைத்தமை.

★ ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் போன்றவற்றை போட்டு மிதித்து, ஊடகவியலாளர்களை கொன்றொழிப்பதற்கும் அச்சுறுத்துவதற்கும் அடாவடித்தனம் பண்ணுவதற்குமான களநிலமையை ஏற்படுத்தி அதனையே ஆட்சிக் காலம் முழுவதும் பேணியமை.

– ஆகவே இவ்வாறு தமிழின வாழ்வியலுக்கே ஆப்பு வைத்த – வைக்கும் எண்ணத்துடன் தொடர்ந்து செயற்படுகின்ற – ஒரு தரப்பு மீண்டும் அதிகாரத்துக்கு வராமல் தடுப்பதற்காக, எமது வாக்கு எனும் ஜனநாயகப் பலத்தை தவறாது பிரயோகித்து நம் இனத்தைப் பேரழிவிலிருந்து பாதுகாக்கும் கடமையைத் தவறாது செய்வோம்.

கடந்த காலங்களில் சட்ட ரீதியாக நடைபெற்ற நீதி,நியாயமான தேர்தல்களில் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியான ஆணையைப் பெற்ற ஏகோபித்த அரசியல் சக்தி நாங்கள் என்ற முறையில், இந்தத் தேர்தலில் எம்முடன் சேர்ந்து தீர்க்கமான முடிவெடுத்து செயற்பட முன்வருமாறு நமது தமிழ் மக்களை உரிமையுடன் வழிப்படுத்தி நிற்கின்றோம்.

## ஒன்றாய் முன்னோக்கி




**– தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.**

காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 26 செவ்வாய்க்கிழமை 12.11.2019 கதிர் 07




# உங்கள் நெற்றியிலுள்ள பொட்டும், தமிழ் மொழி காரணமாகவும் உங்களை கேவலமாக பார்க்காத ஒரு நாடு



"ஒவ்வொரு பிரஜையும் இனம், மதம், வர்க்கம், சாதி அல்லது பாலினம் ஆகியவற்றைக் கருத்திற்கொள்ளாமல் சட்டத்தின் கீழ் சமமாக நடத்தப்படுவார்கள்." - சஜித் பிரேமதாச

அதாவது இலங்கையில் அனைத்து மக்களும் சமமே.
எமது தாய் திருநாட்டில் இனவெறி அல்லது மதத் தீவிரவாதத்திற்கு இடமில்லை.

அது மட்டுமல்ல,

குற்றஞ்சுமத்தப்படாமல், விசாரணையின்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தை நாம் முழுமையாக ஆதரிப்போம்.

பாதுகாப்பு நோக்கங்களுக்கு அவசியமில்லாத
அனைத்து நிலங்களும் அதன் உரிமையாளர்களுக்கு வழங்கப்படும்.


தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 26 செவ்வாய்கிழமை 12.11.2019 கதிர் 07

இனி இது ரகசியம் அல்ல!

இந்த ஜனாதிபதித் தேர்தலில் யார் வென்றாலும் – சஜித் வென்றாலும், கோட்டபாய வென்றாலும் – ஹம்பாந்தோட்டையில் இருந்து ஒரு ஜனாதிபதி தெரிவாவார் என்பது நிச்சயம்.

ஆனால் அப்படி ஒருவர் வென்றால் பக்கம் 02

# சம்பந்தனுக்கு சிவாஜி இரண்டு நிபந்தனைகள்!

## நிறைவேற்றினால் போட்டியில் இருந்து விலகத் தயார் என்றும் அவர் அறிவிப்பு

(எஸ்.நிதர்ஸன்)

யாழ்ப்பாணம், நவ.12

ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகுவதற்கு இரண்டு நிபந்தனைகளை ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் முன்வைத்துள்ளார். இந்த நிபந்தனைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சரியான உறுதிமொழி வழங்கினால் போட்டியிலிருந்து விலகத் தயார் என்றும் அவர் அறிவித்துள்ளார். பக்கம் 03



## கோட்டா மீது சேறு பூச சஜித் தரப்பினர் முயற்சி

பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஸன்)

யாழ்ப்பாணம், நவ.12

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய வெற்றி பெறுவது தெளிவாகத் தெரிகின்ற நிலையில் அந்த வெற்றியைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் கோட்டாபய மீது சேறு பூசும் நடவடிக்கைகளை ஐக்கிய தேசிய முன் பக்கம் 03

## தமிழ் மக்கள் அனைவரும் தவறாது வாக்களியுங்கள்!

யாழ். வணிகர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலே தமிழ் மக்கள் தவறாது வாக்களிக்கவேண்டும். கடந்த 70 வருடங்களாக தமிழ் மக்களின் உரிமைக்கான அகிம்சை, ஆயுதப் போராட்டங்கள் தோல்வியடைந்த நிலையில் எமது உரிமைகளை வென் பக்கம் 03

## வேட்பாளர்கள் குடியுரிமை ஆவணத்தை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவில்லை

கொழும்பு, நவ. 12

ஜனாதிபதித் தேர்தலில் வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்ளும் போது ஜனாதிபதி வேட்பாளர்களின் குடியுரிமை தொடர்பான ஆவணங்கள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்படவில்லை யென்ற தகவலை தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கோட்டா பக்கம் 02

## 11 இளைஞர்கள் கடத்தல்; ட்ரயல் அட்பாரை நியமிக்க கோரினார் சட்ட மா அதிபர்

கொழும்பு, நவ.12

கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய கடற்படையினருக்கு பக்கம் 02

## கைக்குழந்தையின் தாய் நேற்று வெட்டிக் கொலை!

ஸ்கந்தபுரத்தில் பயங்கரம்

கிளிநொச்சி, நவ.12

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இளம் குடும்பப் பெண் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். அவருக்கு 10 மாதக் கைக்குழந்தை உள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக் பக்கம் 02

## அடக்குமுறை ஆட்சிக்கு மீண்டும் இடமளிக்காதீர்

யாழ்ப்பாணத்தில் சந்திரிகா வலியுறுத்து



யாழ்ப்பாணம், நவ.12

எமது நாட்டில் உள்நாட்டுப் போர் நிறைவடைந்து 10 ஆண்டுகள் ராஜபக்ஷ குடும்பம் ஆட்சி செய்தது. அந்த ஆட்சியில் கடத்தல்கள், படுகொலைகள், கொள்ளைகள் போன்ற அடக்குமுறை பக்கம் 02

## படகு மூலம் இந்தியாவுக்கு செல்ல முயன்ற 8 பேர் கைது



மன்னார், நவ.12

சட்டவிரோதமாக படகு மூலம் இந்தியாவுக்குச் செல்ல முயன்ற 8 இலங்கையர்கள் தலைமன்னார், பக்கம் 02

## ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் 47 மோ.சைக்கிள்கள் தீக்கிரை!



கொழும்பு, நவ.12

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் வாகன தரிப்பிடத்தில் நேற்று முந்தினம் இரவு ஏற்பட்ட தீவிபத்தில் 47 மோட்டார் சைக்கிள்களும், ஓட்டோ ஒன் பக்கம் 02

## கோட்டாவுக்கு மனைவி, மகனே வாக்களிக்க முடியாத நிலைமை!

ஹரீன் பெர்னாண்டோ சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 12

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டபாய ராஜபக்ஷவுக்கு அவரது மனைவியும், மகனும் வாக்களிக்க முடியாது. காரணம் அவர்கள் அமெரிக்கப் பிரஜைகள். அமெரிக்கப் பிரஜைகளுக்கு நாம் பக்கம் 03

## மரண தண்டனைக் கைதியை விடுதலை செய்தது எதற்கு?

காரணம் கூறி மழுப்பினார் மைத்திரி

கொழும்பு, நவ. 12

ராஜகிரிய றோயல் பார்க் வீடமைப்புத்தொகுதியில் யுவதி ஒருவரைக் கொலை செய்த குற்றவாளியை மரண தண்டனையில் இருந்து விடுவித்தமை தொடர்பில் சமூகத்தில் எழுந்த விமர்சனங்க பக்கம் 03

## மூன்று வயதுச் சிறுவன் பாம்பு தீண்டி மரணம்!

கிளிநொச்சி, நவ. 12

கிளிநொச்சி மலையாளபுரத்தில், கிராம அலுவலரின் மகனான 3 வயதுச்சிறுவன் பாம்பு தீண்டி உயிரிழந்தார்.

இந்தச் சிறுவன், இரவு

# ராணுவத்தினர் முன் ராஜபக்ஷாக்கள் மண்டியிட்டு மன்னிப்புக்கோர வேண்டும் என்கின்றார் சம்பிக்க

கொழும்பு, நவ. 12

ராஜபக்ஷக்களின் ஆட்சியில் இராணுவத் தலைமையகத்தை வெளிநாட்டுக்கு விற்றமைக்காக இந்த நாட்டு இராணுவத்திடம் மண்டியிட்டு அவர்கள் மன்னிப்புக் கேட்கவேண்டும் என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில்நேற்றுநடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், பாதுகாப்புத்துறையில்நடைபெற்ற பாரிய மோசடிகள் அனைத்தும் ராஜபக்ஷக்கள் காலத்தில் நடைபெற்றதாக சுட்டிக்காட்டினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்–

இராணுவ தலைமையகத்திற்குசொந்தமானகாணிசீனாவுக்கு விற்கப்பட்டமை ஊடக தேசிய நிதி 5 பில்லியன் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டினை எதிர்க்கட்சிதலைவர் மஹிந்தராஜபக்ஷவினால்மறுக்க முடியுமா?

நல்லாட்சி அரசிலும் தேசிய நிதி மத்திய வங்கியின் பிணைமுறி கொடுக்கல் வாங்கல் ஊடாக இடம்பெற்றுள்ளது என்பதை ஒரு போதும் மறுக்கவில்லை.

கடந்தஅரசுபோலமூடிமறைக்கவும் இல்லை. அரசாங்கம் அரச காணிகளைசர்வதேசநிறுவனங்களுக்கு வழங்குவதாக எதிர் தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

கடந்த நாலரை வருட காலமாக ஒரு அங்குலக் காணியைக் கூடவெளிநாட்டுநிறுவனங்களுக்கு விற்கவில்லை. ஒப்பந்த அடிப்படையிலேகாணிகள்குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

நாட்டுமக்கள்எதிர்தரப்பினரது போலியான பிரசாரத்திற்கு ஏமாற்றமடையாமல் அரசியல் ரீதியில் சிறந்த தீர்மானத்தை முன் னெடுக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்டகுற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் சகாக்கள் கருத்துரைப்பது எவ்விதத்திலும் பொறுத்தமற்றது.

ஆகவேஅவரேமறுப்புக்களை தெரிப்பதாயின் நேரடியாக விவாதத்தினைமுன்னெடுக்கவேண்டும். ஆதாரங்களுக்கானஆவணங்களை பகிரங்கப்படுத்ததயார்–என்றார். (ஐ)

## படகுமூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மணல்பாறைப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை கடற்படையினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின்போது இலங்கையில் இருந்து இந்தியாவில் சட்டவிரோதமாகக் குடியேற முயன்ற 08 க் கைது செய்துள்ளனர் என கடற்படைப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இசுறு சூரியபண்டார தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 8 பேரில், 5 ஆண்கள், ஒரு பெண் மற்றும் சிறுவன் ஒருவரும் சிறுமி ஒருவரும் உள்ளடங்குகின்றனர் என்றும் அவர்களிடமிருந்துகையடக்கத்தொலைபேசிகள் மற்றும் ஒரு சில ஆவணங்கள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் கடற்படையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதோடு, கடற்படையின் வழக்கமான கண்காணிப்பு நடவடிக்கை காரணமாக சட்டவிரோத குடியேறிகள் மற்றும் மனித கடத்தல் காரர்களையும் சட்டத்தின் முன் கொண்டு வரக் கடற்படையால் முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## ட்ரயல் அட்பாரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எதிரான வழக்கை விசாரிக்க மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய நீதாய விளக்க நீதிமன்றை (ட்ரயல் அட் பார்) நியமிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரால் இந்தக் கோரிக்கை பிரதம நீதியரசரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

2008-2009 காலப்பகுதியில் கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டனர் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒவ் தி பிளீட் வசந்த கரன்னகொட, நேவி சம்பத் உள்ளிட்ட 14 கடற்படையினருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தக் குற்றப்பத்திரிகையை விசாரிக்கவே நீதாய விளக்க மன்றை நியமிக்குமாறு சட்ட மா அதிபர் கோரியுள்ளார். (ஐ)

## அடக்குமுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆட்சியே நடைபெற்றது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

தற்போதைய தேர்தலில் களமிறங்கியுள்ள ஐக்கிய தேசியக் முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை ஒரு வருடத்துக்குள் தீர்த்து வைப்பதாகக் கூறியுள்ளார். எனவே அவருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

மக்கள் சந்திப்புக்களை நடத்துவதற்காக நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சந்திரிகா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்ப்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு கோரி மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டார்.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ராஜபக்ஷ குடும்ப ஆட்சியில் மக்கள் எந்தளவு பாதிப்புகளை எதிர் நோக்கினீர்கள் என்பதை அறிவீர்கள். இந்த அடக்குமுறை குடும்பத்தினர் மீண்டும் அதிகாரத்துக்கு வரத் துடித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களின் குடும்ப ஆட்சிக்கு இனியும் மக்கள் இடம் கொடுக்கக்கூடாது.

நாட்டில் ஆடசி மாற்றம் ஏற்பட்டு ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டது. நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அவர்களுக்கு மீண்டும் அதிகாரம் செல்லுமாயின் நாட்டில் மீண்டும் கடத்தல்கள், படுகொலைகள், இடம்பெறும்.

அதுமட்டுமல்லாது ராஜபக்ஷவின் குடும்பத்துக்கு எதிராக செயற்பட்டவர்கள் கடத்தப்படலாம், படுகொலை செய்யப்படலாம். சிலவேளைகளில் திட்டமிட்ட வகையில் சிறைகளில் அடைக்கப்பட்டுப் பழிவாங்கப்படுவார்கள். இந்தத் திருட்டுக் கும்பலின் கையில் நாடு மீண்டும் செல்லக் கூடாது.

தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பாகக் களமிறங்கியுள்ள சஜித் பிரேமதாஸவைத் தமிழ் மக்களுக்கும் நன்கு தெரியும். மஹிந்த குடும்பத்தின் ஆட்சியுடன் ஒப்பிடுகையில் இவரது ஆட்சியில் ஜனநாயகம் இருக்கும்.

இதுமட்டுமல்லாது தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்தில் தீர்த்து வைப்பதாகக் கூறியுள்ளார். எனவே தமிழ் மக்கள் நன்கு சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

நான்ஜனாதிபதியாகஆட்சிக்கு வந்து பத்து நாள்களிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்குக் கடிதம் எழுதியிருந்தேன். மேலும் அவர்களுக்கு நான் ஆட்சியில் இருந்த காலத்தில் 42 கடிதங்கள் எழுதியிருந்தேன். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சமாதானச் சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தேன்.

மேலும் எமது நாட்டில் சுனாமி இடர் ஏற்பட்டிருந்தபோதுகூட நாம் அவர்களுடன் இணைந்து மக்களை மீட்டு அத்தியாவசிய உதவிகளை வாங்கியிருந்தேன். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் அமைதி முயற்சிகளை மேற்கொண்ட போதும் அவர் தாம்தான் வடக்கின் அரசன் தமிழீழத்தை அடைந்தே தீருவேன் எனக் கூறினார். அதனாலேயே நாம் இறுதியில் போரை ஆரமிக்க வேண்டியிருந்தது – என்றார். (ஐ-07)

## கைக்குழந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்கந்தபுரம் 2ஆம் வாய்க்காலில் இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்தில் அன்ரன் ஜெயராஜ் மேரி அகிலா (வயது -29) என்பவரே கொல்லப்பட்டார்.

அவரது கணவர் தொழில் நிமித்தம் வவுனியா சென்றிருந்த வேளை வீட்டில் குழந்தையுடன் இருந்த சமயம் இந்தக் கொலை இடம்பெற்றதாக தகவல் வழங்கப்பட்டது.

அவரது உடலில் காயங்கள் காணப்படுகின்றன. நீதிவான் மற்றும் சட்ட மருத்துவ அதிகாரியின் விசாரணையின் பின்னரே மேலதிக தகவல்கள் வெளியிட முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) றும் முற்றாக எரிந்து நாசமாகின.

கொழும்பு 1, முதலிகே மாவத்தையில் அமைந்துள்ள இந்த வாகனத் தரிப்பிடத்தில் நேற்று முன்தினம் இரவு 10 மணி அளவில் இந்த தீவிபத்து ஏற்பட்டுள் ளது.

தீயை அணைப்பதற்காக 5 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதாக தீயணைப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தீ பரவலுக்கான காரணம் தெரியவராத நிலையில், கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## மூன்று வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உறங்குவதற்காகப் படுக்கை அறைக்குச் சென்றுள்ளார். சிறிது நேரத்துக்குப் பின்னர், வீட்டுக்குள் இருந்து, கண்டங்கருவளை இனத்தைச் சேர்ந்த பாம்பு வெளியேறியுள்ளது. அந்தப் பாம்பை சிறுவனின் தந்தை அடித்து கொன்றுவிட்டார். அதன் பின்னர் எழுந்து வந்த சிறுவன், மீண்டும் உறங்குவதற்காகச் சென்றுவிட்டார் எனத் தெரியவருகின்றது.

இந்நிலையில், நேற்றுக் காலை சிறுவனை எழுப்பிய போது, அவன் நினைவற்று இருந்தான் என்றும் இதன் பின்னர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குச் சிறுவனை எடுத்துச் சென்றபோது, அவர் பாம்பு தீண்டியதில், ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்றும் வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வேட்பாளர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பயவின் குடியுரிமை முறைப்படி நீக்கப்பட்டுவிட்டதா என, ஐ.தே.கவின் சார்பில் அஜித் பி பேரேரா நேற்று கேள்வியெழுப்பியிருந்தார். இதற்குப் பதிலளித்தபோதே, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் இந்த பதிலை வழங்கினார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மற்றவரின் அரசியல் எதிர்காலம் சூனியமாகி விடும் என் பதுதான் இப்போதைய யதார்த்தமாகும்.

கலாசாரமற்றும்தொல்பொருள் திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வீடுகள் கட்டும் திட்டங்களுக்கு மாற்றினார் என்பது உட்பட் –.அரச நிதியைத் துஷ்பிரயோகம் செயதார் என்பவை உட்பட –பல குற்றச்சாட்டுகள் ஏற்கெனவே நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளில் சஜித்துக்கு எதிராக வெளிவந்துள்ளன.

இந்தத் தேர்தலில் ராஜபக்ஷக்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் சஜித் தரப்பை துவம்சம் செய்வதற்கு இவ்வளவுமே அவர்களுக்குப் போதும் என்கின்றார் கொழும்பு அரசியல் விமர்சகர் ஒருவர்.

நாட்டின் இராணுவத் தளபதியாக இருந்து புலிகளுக்கு எதிரானயுத்தத்தைவென்றுகொடுத்த சரத் பொன்சேகாவையே ஒன்றுமில்லாத விடயங்களுக்காக ஜம்பர் உடையுடன் வருடக்கணக்கில் கம்பி எண்ண வைத்தவர்கள் ராஜபக்ஷக்கள். தேர்தலில் தங்களை எதிர்த்து நின்று தங்கள் வயிற்றைக் கலக்கும் விதத்திலான போட்டி ஒன்றைத் தந்தார் என்பதைத் தவிர சரத் பொன்சேகா இழைத்த குற்றம் வேறொன்றுமில்லை.

இப்போதும் அதேபோல கடும் போட்டியைக் கொடுக்கிறார் சஜித். வென்றால் தப்பி விடுவார். தோற்றால் அவரது எதிர்காலம் – அரசியல் – நாசமாகி விடும். அந்த வேலையை ராஜபக்கள் கனகச்சிதமாகப் பார்த்துக் கொள்வார்கள்.

அதே போன்றுதான் ராஜபக்ஷகளின் நிலைமையும். பிரேமதாஸக்கள்–ராஜபக்ஷக்கள் பகை இன்று, நேற்று ஆரம்பமானதல்ல. அது சுமார் முப்பது வருடத்துக்கு முந்திய பகை.

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் கொடூரங்களை ஜெனீவாவில் மனித உரிமைகள் ஆணையகத்துக்கு எடுத்துச் சென்றவர் மஹிந்த ராஜபக்ஷ.

இளம் துடிப்புமிக்க மனித உரிமைகள் ஆர்வலராக விளங்கிய மஹிந்த ராஜபக்ஷவை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வழிமறித்த இலங்கை அதிகாரிகள் இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள், விவகாரங்கள் தொடர்பாக மஹிந்தர் தம்முடன் எடுத்துச் சென்ற ஆவணங்கள், ஆதாரங்கள், படங்கள், புள்ளிவிவரங்கள் எல்லாவற்றையும் உருவி எடுத்து விட்டுத்தான் மஹிந்தவை மேற்கொண்டு ஜெனீவா செல்ல அனுமதித்தனர். இலங்கையின் அப்போதைய எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் ரணசிங்க பிரேமதாஸவின் அரசின் அராஜகங்கள் குறித்து ஜெனீவா மன்றத்தில் முழங்கியவர் மஹிந்தர்.

அந்தத் தீராப்பகை அடுத்த தலைமுறை தாண்டி இப்போதும் – இந்த ஜனாதிபதித் தேர்தலிலும் – தொடர்கின்றது.

இந்தத் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வென்றாலும் மஹிந்தர் தரப்பை சும்மா விடப்போவதில்லை. முன்னைய மைத்திரி –ரணில் அரசு போல சஜித் தலைமை மெத்தனமாக இருக்கும் என்பதற்குச் சாத்தியங்கள் இல்லை.

ஏதோ ஒரு தரப்பின் அரசியல் எதிர்காலம் சூனியமாகும் என்பது உறுதி. அது யாருடையது என்பது 17ஆம் திகதி காலை தெரியவரும்.

இந்தத் தேர்தல் முடிவு மிக மிகநெருக்கமாகவே இருக்கும், மயிரிழை வித்தியாசமே உள்ளது. சிறுபான்மையினரின் வாக்குகள்தாம் வெற்றி – தோல்வியைத் தீர்மானிக்கப் போகின்றன என்றெல்லாம் உளவுப் பிரிவுகளின் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

அது புரிந்தபடியால்தான், கடைசி நேரத்தில் தமது கூட்டமைப்பை முழு அளவில் களத்தில் இறக்கும் பாய்ச்சலை வெளிப்படுத்தி நிற்கின்றார் சம்பந்தன் என்றும் அவ்வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தப் பின்புலத்தில்தான் தேர்தலில் இருந்து விலகுமாறு உருக்கமான வேண்டுகோள் ஒன்றைத் தம்பி சிவாஜிலிங்கத்துக்கு யாழ்ப்பாணத்தில் வைத்து வெளியிட்டிருக்கின்றார் சம்பந்தன்.

சிவாஜிலிங்கம் தரப்பு இக்கோரிக்கை குறித்துத் தீவிரமாகப் பரிசீலிப்பதாகக் கேள்வி. நல்லது. ஆனால் ஒரு விடயத்தை சிவாஜிலிங்கம் தரப்புக்கு முன்கூட்டியே சொல்லி வைப்பது நமது கடமை என்று நினைக்கிறோம்.

மிக மிக நெருக்கமான போட்டி என்ற உளவுத் தகவல்கள் உண்மையானால், சஜித், கோட்டா இருவரில் ஒருவர் அற்ப, சொற்ப வாக்குகளினால் வெல்லக் கூடிய வாய்ப்பு நேரலாம்.

அப்படி ஒரு சொற்ப வாக்குகளினால் கோட்டபாய ராஜபக்ஷ வென்று, அந்தச் சொற்ப வித்தியாசமான வாக்குகளுக்குச் சமனான தொகையையோ அல்லது அதற்குக் கூடிய தொகையையோ சிவாஜிலிங்கம் பெற்றிருப்பாராயின் அவரும் அவரது ஆதரவாளர்களும் அதற்குப் பின்னர் தமிழ் மக்கள் மத்தியில் தலையையே காட்ட முடியாத நெருக்கடி ஏற்படும்.

காசை வாங்கிக்கொண்டு, மஹிந்த ராஜபக்ஷ தரப்பை வெற்றிபெற வைக்கும் நோக்குடனேயே களத்தில் இறங்கினார் சிவாஜி என்ற குற்றச்சாட்டு நிரந்தரமாகி விடும்.

என்னைக்கேட்டால் சம்பந்தன் ஐயாவின் உருக்கமான வேண்டுகோளை மதித்து, சிவாஜிலிங்கம் இறங்கிப் போவதுதான் நல்லது. அந்தக் கோரிக்கைக்கு மதிப்புக் கொடுப்பதன் மூலம் தன்னை அரசியலில் பெருந்தரப்பாக மாற்றிக் கொள்வதே உசிதமானதும், பொருத்தமானதும் என்பேன்.

சிவாஜிலிங்கத்தைச் சூழ நிற்போர், நிதி ஆதரவு கொடுப்போர், வழிகாட்டுவோர், ஆதரவாளர்கள் என்ன சொல்லுவார்கள் என்று பார்க்காமல் சிவாஜி தாமாக முடிவெடுப்பது நல்லது.

எங்கள் அட்வைஸை' அவர் கேட்பாரே என்னவோ...! கேட்டால் அவருக்கும் நல்லது, தமிழ் சமூகத்துக்கும் நல்லது. செய்வாரா சிவாஜி?

–மின்னல்–

## சம்பந்தனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3ஆவதுதிருத்தத்தைமுழுமையாக நடைமுறைஒப்படுத்தவேண்டும், ஒற்றையாட்சி, பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்காமல் புதிய அரசியல்தீர்வுவரவேண்டும்ஆகிய இரு நிபந்தனைகள் குறித்தும் சம்பந்தஐயாஉறுதிமொழிதரவேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் இந்த ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகிக் கொள்ளவேண்டுமென நேற்று முன்தினம்சாவகச்சேரியில்நடந்த நாடாளுமன்றஉறுப்பினர்ரவிராஜ் நினைவுநிகழ்வில்வைத்துதமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவர் இரா.சம்பந்தன் பகிரங்கக் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந் நிலையில் சுழிபுரத்தில் நேற்றுநடைபெற்றதனது தேர்தல் பிரசாரக்கூட்டத்தில்கலந்துகொண்டு உரையாற்றும்போது சம்பந்தனின் கோரிக்கை தொடர்பில் பதிலளித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இதற்கமைய கூட்டமைப்பின்தலைவர்சம்பந்தன் ஐயாஉட்படபலதரப்பினர்களையும் சுயாதீனக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர். ஆனால் இவ்வாறு பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டால் வாக்குகள் பிரியும் என்றோ இந்த வேலை வேண்டாம் என்றோ அப்போது கூட சம்பந்தன் ஐயா சொல்லியிருக்கலாம்.

ஆனால் அப்படி ஏதும் அப்போது சொல்லவும் இல்லை. பொது வேட்பாளர் தொடர்பான அந்த முயற்சியும் தொடர்ந்து முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலைமையில்தான் நான் பொது வேட்பாளராகக் களமிறங்கியிருந்தேன். இவ்வாறு நான் களமிறங்கிய நேரத்தில் ஐந்தாயிரம் வாக்குகள் கூட சிவாஜிலிங்கம் எடுக்கமாட்டார் என்று சொன்னவர்கள் இப்போது தம்பி சிவாஜிலிங்கம் விட்டுக் கொடுக்கவேண்டும்-விலகவேண்டும் என்று சொல்கிறார்கள்.

அது ஏன் என்றால் நெருக்கடி வந்துவிட்டதால்தான். தமிழ் மக்களுக்கு நீங்கள் எதனையும் தரமாட்டீர்கள் என்று சொன்ன காரணத்தால் தமிழ் மக்களாகிய நாங்களும்உங்களுக்குஅதாவது எந்தச் சிங்களப் பேரினவாதிகளுக்கும் தரமாட்டோம் என்று சொன்ன காரணத்தினால் உங்களுக்கு அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

இதனால் அந்த இரண்டு தரப்புக்களும் மாறி மாறி தூது அனுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். வாருங்கள்வாருங்கள்பேசுவோம், பேசுவோம் என்று அழைப்பு விடுக்கின்றார்கள். அதாவது கோட்டாபய தரப்பில் இருந்தும் சஜித்தரப்பில் இருந்தும் இவ்வாறு தூது வந்துகொண்டிருக்கிறது. இப்போது போதாக்குறைக்குச் சம்பந்தர் ஐயா நேரடியாக வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

ஆகவே இது தொடர்பில் ஊடகங்களூடாகச்சம்பந்தன்ஐயாவுக்கு நான் பதில் கூறுவதுடன் இந்தக் கூட்டத்தில் அதனைப் பொது மக்களுக்கும் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது என்னைவிலகுமாறுஇன்றைக்குச் சம்பந்தன் ஐயா கேட்கிறார். ஆனால்இதுவரைஎன்னநடந்தது என்று பார்க்க வேண்டும்.

தந்தைசெல்வநாயகம்தொடக்கம் அண்ணண் அமிர்தலிங்கம், தொடக்கம் தலைவர் பிரபாகரன் வரை சிங்களவர்கள் எமாற்றி எமாற்றிக் கடைசியில் இப்போது சம்பந்தர் ஐயா இருக்கின்றார். இப்போது தமிழ் மக்களை எமாற்றிய சிங்களத் தலைவர்களாக இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும்இருக்கவேண்டும்.

ஆகவேசம்பந்தன்ஐயாவிடம் இரண்டு கோரிக்கைகளை நான் முன்வைக்கிறேன். நீங்கள் அதைப் பரிசீலித்து இங்கே இருக்கக்கூடிய எங்கள் மதப் பெரியார்கள்அதாவதுதிருகோணமலை ஆயர், தென்கையிலை ஆதீனம், சின்மையாமிசன்ஆகிய மூவரையும் அழைத்து நீங்கள் சஜித்பிரேமதாஸவுடன்பேசுங்கள்.

அதற்காக நான் இரண்டு கோரிக்கைகளைத் தான் முன்வைக்கிறேன். அதில்முதலாவதாக அரசமைப்புச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று சொல்லுங்கள். இன்றைக்கு அரசமைப்பு என்பது 19 திருத்தங்கள் அடங்கிய அம்சம். அந்த 19 திருத்தங்களில் 13 ஆவது திருத்தத்தின் கீழ் தான் மாகாண சபைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதைமுழுமையாகஅமுல்படுத்துவேன் என்று சொல்லவேண்டும். அதில் தான் காணி அதிகாரம் பொலிஸ்அதிகாரம் இருக்கின்றது. அதைப்போல இந்திய–இலங்கை ஒப்பந்தத்தில் தான் 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு அதில்வடக்கு–கிழக்குமாகாணங்கள் இணைக்கப்பட்டிருந்தன.

ஒரு சண்டை நடந்தால் அல்லது சண்டை முடிந்தவுடன் அவரவர்கள் நின்ற இடங்களுக்கு அதாவது அவரது பொசிசனுக்குப் போக வெண்டுமென்று சொல்வார்கள். நீங்கள் தற்காலிகமாகவேனும் இணைக்கப்பட்ட வடக்கு–கிழக்கை நிரந்தரத் தீர்வு காணும் வரை செயற்படுத்துங்கள். இவற்றையே ஒரு நிபந்தனையாக நான் முன்வைத்து ஏற்றுக் கொள்கிறேன்.

அதேபோன்று இரண்டாவது நிபந்தனை என்னவென்றால் எதிர்காலத்திலே நாங்கள் செய்யப் போகின்ற அல்லது புதிய அரசியல் தீர்வை இவர்கள் உண்மையாகக் கொண்டுவருவார்களாக இருந்தால் ஒற்றையாட்சி, பௌத்தத்துக்கு இடம் கொடுக்காமல் அல்லது அவற்றை முன்நிபந்தனைகளாக வைக்காமல் தாங்களும் பேசத் தயார் என்று சொல்லட்டும்.

இவ்வாறு இந்த இரண்டு நிபந்தனைகளை மட்டும் தான் நான் முன்வைக்கிறேன். ஆகவே 14 ஆம் திகதி இரவுக்குள்ளே இந்த நிபந்தனைகளை தொடர்பில் பேசி அதனடிப்படையில் நிபந்தனைகள் ஏற்கப்படுவதாகவும், அதனை மதத்தலைவர்கள் ஏற்றுக் கொள்வார்களாக இருந்தால் நான் வெளியேறத் தயார்.

ஆகவே தான் யாரையும் வெற்றி கொள்ளவேண்டும், யாரையும்தோற்கடிக்கவேண்டுமென்ற நிகழ்ச்சி நிரல் எங்களுக்குக் கிடையாது. இரண்டு பேருமே கொலைகாரர்கள்தான். இரண்டுமே கொலைகாரக் கும்பல்கள் தான். ஆனாலும் புள்ளிகளின் அடிப்படையிலே கோட்டாபய முன்னிலையில் இருக்கிறார். மற்ற அணியினர்கொஞ்சம்கீழேஇருக்கிறார்கள்.

இவ்வாறிருக்கையில் சிங்கள பௌத்த வீரன் யார் என்று தான் இப்போது அவர்களுக்குள் போட்டி நடக்கிறது. ஆனால் அவர்களுக்கு தமிழர்களுடைய வாக்குகளும் வேண்டும். ஒரு பக்கத்தில் கோட்டாபய அணி மற்றப் பக்கத்தில் குற்றவாளி சரத் பொன்சேகா மற்றும் கொள்ளையடித்த அமைச்சர்கள் இருக்கின்றசஜித்பிரேமதாஸ அணிஎனஇருஅணிகள்உள்ளன.

இன்று மக்கள் வாழ்வுக்கு தடுமாறிக்கொண்டிருக்கின்றார்கள். பல்லாயிரம் கோடிகளைக் கொள்ளையடித்த ரணில் விக்கிரமசிங்க அரசு பிணைமுறி மோசடியிலே ஈடுபட்டிருக்கின்றது. இதில்பல்வேறு குற்றச் சாட்டக்களையுடைய அர்ஜுன மகேந்திரன் சிங்கப்பூரில் இப்பொது இருக்கிறாராம். அதே நேரம் விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பொறுப்பெடுத்த கே.பி குமரன் பத்மநாதனை மலோசியாவில் இருந்து இங்கே நீங்கள் கொண்டு வர முடியுமென்றால் சிங்கப்புரிலுள்ள அர்ஜுன மகேந்திரனை ஏன் இங்கு கொண்டு வர முடியவில்லை–என்றார். (ஐ–07)

## மரண தண்டனைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளையடுத்து நேற்று விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ளது ஜனாதிபதி அலுவலகம்.

அத்துரலிய ரத்ன தேரர் மற்றும்சட்டத்தரணிகள், புத்திஜீவிகள் விடுத்த வேண்டுகோளையடுத்து –குற்றவாளியானஜெயமஹாவின் நன்னடத்தை மற்றும் அவரின் கடந்த காலச் செயற்பாடு களை கருத்திற்கொண்டு ஜனாதிபதி பொதுமன்னிப்பில் அவரை விடுத்தார் என ஜனாதிபதி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## கோட்டாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏன் வாக்களிக்க வேண்டும் எனக் கேள்வியெழுப்பியுள்ளார் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ.

கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கோட்டாபயவின் மனைவி எந்த நாட்டுப் பிரஜை என கேட்ட போது, அலி சப்ரி அது தேவையற்றதென்கிறார். அதாவது, அவர் அமெரிக்கப் பிரஜை. ஜனாதிபதித் தேர்தலில் அவரால் வாக்களிக்க முடியாது. மகனும் அமெரிக்கப் பிரஜை. அவராலும் கோட்டாவுக்காக வாக்களிக்க முடியாது.

மனைவி, மகன் வாக்களிக்க முடியாத அமெரிக்கப் பிரஜைக்காக நாம் ஏன் வாக்களிக்கவேண்டும்?

கோட்டாவின் குடியுரிமை இரத்துச் செய்யப்பட்ட விவரம், இம்முறையும் வெளியாகவில்லை. ஆனால், கோட்டா தனது குடியுரிமையை நீக்கிவிட்டதாகச்சொல்கிறார். அப்படியானால், கோட்டா விசேடமானவரா? அவர் அமெரிக்க உளவாளியா?

கோட்டாவின் குடியுரிமை பற்றி நான் பேஸ்புக்கில் பதிவிட்டேன். பின்னர் அது நீக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். நான்நீக்கவில்லை. அவர்கள் ஒரு வலையமைப்பாகச் செயற்பட்டு, பேஸ்புக்குக்கு முறையிட்டு அகற்றியுள்ளனர். அதிகாரமில்லாத நிலையிலேயே எப்படி வலையமைப்பாகச் செயற்பட்டு வருகிறார்கள் என்பதை பாருங்கள்–என்றார். (ஐ)

## கோட்டா மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னணியின் சஜித் பிரேமதாஸ தரப்பு மேற்கொள்ளவதாகக் குற்றஞ்சாட்டியுள்ள பொதுஜன பெரமுன வெள்ளைவான் தொடர்பில் நாடகமொன்றை அரங்கேற்றியிருப்பதாகவும் சாடியுள்ளது.

தமிழ் மக்கள் மத்தியில் உணர்வுகளைத் தூண்டி வாக்குகளை அபகரிப்பதற்காகவே இந்தச் சதி வேலைகளை சஜித் தரப்பினர் முன்னெடுத்து வருகின்றனர் எனக் கண்டித்துள்ள வடக்கு முன்னாள் ஆளுநரும் பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசார இணைப்பாளருமான ரெஜினோல்ட் கூரே, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வட மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா ஆகியோர் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டுமென்றும் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். சிவலிங்கப்புளியடியிலுள்ள பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசார அலுவலகத்தில் இவர்கள் இணைந்து நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:–

ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் கோட்டாபயவின் வெற்றி மிகவும் தெளிவாகத் தெரிகிறது. அந்தவெற்றியைஏற்றுக்கொள்ள துடியாத தோல்விப் பயணத்தில் உள்ள எதிர்த்தரப்பு வேட்பாளர் சஜித் பிரேமதாஸ அணியினர் கோட்டாபய தொடர்பில் பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர்.

எமது அணியின் வெற்றிப் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையில் தான் எதிரணியினர் எம்மீதுசேறுபூசும்நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அதற்காக பல்வேறு பொய்கள் மற்றும் ஏமாற்று வேலைகள் எனப்பலவற்றைச்செய்கின்றனர். எமது வேட்பாளர் கோட்டாபயவின் வெற்றியைப் பொறுத்துக் கொள்ள முடியாத அல்லது சகித்தக் கொள்ள முடியாத நிலையில் தான் மக்களைக் குழப்பமடைச்செய்யும் வகையில் பொய்களைக் கட்டவிழ்த்து விடுகின்றனர்.

அதன் வெளிப்பாடாகவே வெள்ளைவான் தொடர்பில் ஒருவரைத்தாமே கொண்டுவந்து கதைக்கச் செய்து தாமே மீண்டும் அழைத்துச்சென்றிருக்கின்றனர். ஆக மொத்தத்தில் அவ்வாறு இவர்கள் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து ஒரிருவர் சொல்கின்றபொது அதுதொடர்பில் உடன் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

ஆனால் அந்தக் குற்றச்சாட்டுக்களைச்சொன்னவரையே தமது வாகனங்களில் பாதுகாப்பாக அழைத்துச் சென்றிருக்கின்றனர். அதே நேரம் இந்தக் குற்றச்சாட்டக்களைச் சொன்னவர்களும்தம்மைஉருமறைத்தும் முன்னுக்குப் பின் முரணனாக மாறுபட்ட கதைகளையே கூறியிருக்கின்றனர்.

ஆகவே தாம் வெற்றி பெற முடியாது என்பதால் தேர்தல் நெருங்கும் நேரத்தில் மற்றவர்கள்மீது சேறு பூச முயல்கின்றனர். அது மட்டுமல்லாமல் கோத்தபாய ராஜபக்ச தேர்தலில் களமிறங்கள் முன்னரும் அவ்வாறு களமிறங்கிய பின்னரும் கூட அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அவரைத் தடுப்பதற்கு முயன்றனர். அது முடியவில்லை. இப்போது அவர் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வெற்றியை தடுக்கப்பார்க்கின்றனர். அதுவும் இவர்களால் முடியாது.

பல்வேறு சவால்களைச் சந்தித்துஎல்லாவற்றிலும்வெற்றியைப் பெற்று வருகின்ற கோட்டாபய இந்த தேர்தலிலும் வெற்றியைப் பெற்றுக் கொள்வார். மேல்மாகாணம், தெற்கு மாகாணம் மட்டுமல்ல வடக்கு கிழக்கு என அனைத்து மாகாணங்களிலும் அவருக்கான ஆதரவு அதிகரித்துக் கொண்டே செல்கின்றது–என்ரனர். (ஐ–07)

## தமிழ் மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றெடுக்க முடியாத சூழ்நிலையில் நாம் புத்திசாதூரியமாக நடக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம்.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறது யாழ். வணிகர் கழகம்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து யாழ். வணிகர் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

அகிம்சைப் போராட்டத்துக்கு இந்த நாட்டில் மதிப்பற்றநிலையில் நாம் எமது இனத்தைப் பாதுகாத்து புத்திசாதூரியமாக அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லவேண்டிய நிலையில் இருக்கின்றோம். இந்த நாட்டில் சில பௌத்த பேரினவாத சக்திகளிடமும், சில சிங்களப் பேரினவாத சக்திகளிடமும் தமிழ் மக்கள் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வேளையில் கடந்த 70 வருடங்களாக எத்தனையோ முறை பேச்சு நடத்தியும், உடன்படிக்கைகள் செய்தும் எந்தச் சிங்கள தலைமைத்துவமும் எங்களுக்கான உரிமையை வழங்க முன்வரவில்லை. எந்தவகையான அனுகுமுறைமூலம்எமதுஉரிமையைப் பெற்றெடுக்க முடியுமென வழி தெரியாமல் ஏங்கித் தவிக்கின்றோம். இவ்வேளையிலே ஜனாதிபதி தேர்தல் வருகிறது. இந்தத் தேர்தலில்தான் தேசிய ரீதியில் தமிழ்மக்கள் பயன்படுத்தக் கூடிய ஒரு வாக்குரிமையைக் கொண்டுள்ளோம். எனவே இதைத் தவறாது பயன்படுத்துங்கள். தமிழ் மக்களாகிய உங்கள் அனைவருக்கும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை புரிந்து கொள்ளக்கூடிய ஒரு ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வேண்டிய கடமை உள்ளது. ஜனநாயக ரீதியில் உங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டியது உங்கள் எல்லோரது கடமையுமாகும். இதன் மூலமே தற்போதிருக்கும் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்த கூடிய நிலை உள்ளது.

தமிழர்களின் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்பு தமிழர்கள் பல வழிகளிலும் இலங்கை அரசால் அடக்கியாளப்படுகின்ற நிலை வேகமாக தொடர்ந்த வண்ணம் உள்ளது. அத்துமீறிய சிங்களக் குடியேற் றங்கள் அதிகரித்துள்ளதுடன், சமய ரீதியாகவும், வேலை வாய்ப்புக்களிலும் பாகுபாடுகள் பார்க்கப்படுகின்றன. தமிழர்களுடைய பூர்வீக நிலங்களின் அபகரிப்பு நடைபெறுகிறது. தமிழ் மக்கள் முன்பு இருந்ததைவிட தற்போது பல வழிகளிலும் புறக்கணிக்கப்படுகின்றனர். இப்படியானதொரு சூழ்நிலையில் வரும் ஜனாதிபதித் தேர்தலில் இதுவரை காலமும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்த அடக்குமுறைகளில் இருந்து விடுபட்டு சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க தமிழ் மக்கள் புத்தி சாதுரியமாகவும், மதிநுட்பமாகவும் சிந்தித்து சரியானதொரு ஜனாதிபதி வேட்பாளருக்கு தங்களுடைய வாக்குகளை அளிக்க வேண்டும். எந்த வேட்பாளர் தமிழ் மக்களுக்கு நன்மை செய்யாவிட்டாலும் மறுவாய்ப்பில்லைதீமைசெய்யாமல் இருப்பார் என நினைக்கின்றீர்களோ அவருக்குவாக்களியுங்கள்.

தமிழ் மக்களாகிய நீங்கள் கடந்த கால வரலாறுகளைச் சீர்தூக்கி பார்த்தும், ஏற்கனவே தமிழ் மக்கள் தேர்தலைப் பகிஸ்கரித்ததன் மூலம் ஏற்பட்ட விளைவுகளை மனதில் கொண்டும் எவருமே இச்சந்தர்ப்பத்தை தவறவிடாது புத்திசாதூரியமாக பகுப்பாய்வு செய்து அன்னப்பட்சி பாலையும் நீரையும் பகுத்தறிவதைப் போன்று நீங்களும் பகுப்பாய்வு செய்து சரியான ஒருவரைத்தெரிவுசெய்யதவறாது எல்லா தமிழ் மக்களும் வாக்களிக்கவேண்டுமென்று யாழ் வணிகர் கழகம் கேட்டுக் கொள்கின்றது.–என்றுள்ளது. (ஐ–7)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## பொய் பரப்பப்படும் காலம்

**ஜனாதிபதித் தேர்தலுக்கான இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.**

**தேர்தல் பிரசாரம் – பரப்புரை – நாளை நள்ளிரவுடன் முடிந்து விடும். 48 மணி நேரத்துக்குள் பிரசாரம் முடிவுக்கு வந்து விடும்.**

**இறுதிக் கட்ட பிரசாரம் நிச்சயம் படு சூடாக இருக்கும். மக்கள் மனதை வென்றுவிட வேண்டும், எதிர்த்தரப்பு மீது மக்களின் வெறுப்பைத் திருப்பி விட வேண்டும் என்பதற்காக கட்சிகளும், தரப்புகளும் இந்த இறுதிக் கட்டத்தில் என்ன வேலையையும் செய்யும். எந்த எல்லைக்கும் செய்யும்.**

**நாளை நள்ளிரவுடன் பிரசார நடவடிக்கைகள் முடிவடைந்து விடும். சரியோ, தவறோ – நீதியோ, இல்லையோ – உண்மையோ, பொய்யோ – இந்தக் கடைசி நேரக் கட்டத்தில் எதையாவது விதைத்துவிட்டால், அதை மறுத்துரைத்து, உண்மையைத் தெளிவுபடுத்த நேரமும் வாய்ப்பும் கிடைக்காது என்பது யதார்த்தம்.**

**இந்த இக்கட்டை வசமாகப் பாவிக்கும் தீய முயற்சிகளில் கூட கட்சிகள், தரப்புகள் நிச்சயம் இறங்கும்.**

**அதனால், இந்தக் கடைசி நேரத்தில் உண்மைகளை விடப் பொய்மைகள் இரட்டை வேகம் கட்டி விதைக்கப்படவும், விரிவாகப் பரப்பப்படவும் அதில் வாய்ப்புகள் உள்ளன. அதனால் அவை குறித்துப் பொதுமக்கள் விழிப்பாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டும்.**

**குறிப்பாக ஒப்புதல் வாக்குமூலங்கள், வீடியோப் பேட்டிகள் என்ற பெயரில் மக்கள் மனதை நெருங்கும் – நெருடும் – தொடும் விடயங்கள் இறுதி நேரத்தில் விடுக்கப்படலாம். அது குறித்து வாக்காளர்கள் சிரத்தையாக இருக்க வேண்டும்.**

**வடக்கு மாகாண சபைக்கு நடைபெற்ற ஒரேயொரு தேர்தலின்போது, வாக்களிப்பு நாளன்று, தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளர் தெரிவித்தார் என்ற பெயரில் சில கருத்துக்களை இட்டுக்கட்டி ஒரு நாளிதழின் பெயரில் போலிப் பத்திரிகை கூடப் பிரசுரமானமை நாம் மறப்பதற்கில்லை. அதனால் சடுதியாக வாக்களார்களுக்கு ஏற்பட்ட குழப்பம் நமக்குத் தெரிந்ததுதான்.**

**மஹிந்த ராஜபக்ஷவின் இருண்ட யுக ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றவை எனத் தெரிவித்து கடைசி நேர ஊடகப் போட்டி ஒன்று வெளியாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.**

**அந்த இருண்ட யுக ஆட்சிக் காலத்தில் பலர் பலவந்தமாகக் கடத்தப்பட்டு பின் காணமலாக்கப்பட்டனர். தலைநகரிலும், வெளியிலும் இப்படிக் காணாமல்போனாரின் தொகை பல நூறுகளைத் தாண்டும். அது பொதுவாகப் பரகசியமான விடயம்தான். கடத்தப்பட்டவர்கள் காணாமலாக்கப்பட்டு விட்டனர் என்பது உறுதி.**

**ஆனால், அவர்களுக்கு என்ன நடந்தது என்ற விடயத்தை நெஞ்சைப் பதைபதைக்கும் விதத்தில் அம்பலப்படுத்தி, மக்கள் மனதை அதிர வைக்கும் முயற்சி எடுக்கப்பட்டிருக்கின்றது.**

**அந்தப் பேட்டியில் கூறப்பட்ட விடயங்கள் முற்றும் முழுதாக உண்மையாக இருக்கலாம். அல்லது பொய்யாகவும் கூட இருக்கலாம்.**

**ஆனால், கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியின்போது இந்த உண்மைகள் ஏன் வெளிவராமல் இருந்தன, அவற்றை அந்தக் காலத்திலும் கூட வெளிப்படுத்தத் தவறியமை ஏன் என்ற கேள்விகள் எல்லாம் எழுகின்றன.**

**இதுபோல, இருண்ட யுக ஆட்சிக் காலத்தின்போது மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் பினாமியாக இருந்தவர்களில் ஒருவர் சஜின் வாஸ் குணவர்த்தன. ஜனாதிபதி மஹிந்தரின் வலது கரமாகவும், தேசியப் பட்டியல் நியமன எம்.பியாகவும், வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு உறுப்பினராகவும் கூடச் செயற்பட்டவர் அந்தத் தமிரில் லண்டனுக்கான இலங்கைத் தூதுவரை அவரே வன்முறையாகத் தாக்கினார் என்று கூறப்பட்டது. அதற்காக அப்போது அவர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. எடுக்கப்பட முடியவில்லை. தூதுவர்தான் வேறுவழியின்றி அவமானத்துடன் பதவியை இராஜினமாச் செய்துவிட்டு விலகிப் போனார்.**

**அந்த சஜின் வாஸ் குணவர்த்தன இருண்ட யுக காலத்தின் லீலைகள் குறித்து ஒப்புதல் வாக்குமூலமளிக்கும் ஒரு வீடியோ கூட வெளிவர இருப்பதாகக் கூறப்படுகின்றது.**

**கடந்த ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறுக் குண்டுத் தாக்குதல்களை நடத்திய கொடூரத்தின் சூத்திரதாரி ஸக்ரான். அவரின் மனைவி வழங்கும் ஒரு பேட்டி கூட எந்தநேரமும் வெளிவரலாம் எனக் கூறப்படுகின்றது.**

**அன்னப்பறவை தண்ணீரிலிருந்து பாலைப் பிரித்தெடுக்குமாம். அது போன்று தேர்தல் வாக்களிப்பு வரையான காலங்களில் பொய்யுடன் கலந்து பரப்பப்படப் போகின்ற உண்மைகளை வடிகட்டி, உள்வாங்கிக் கொள்வது பொதுமக்களின் பொறுப்பாகப் போகின்றது.**

# உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் சகல மாணவருக்கும் பல்கலை அனுமதி

## உறுதியளிக்கிறார் கோட்டாபய



கொழும்பு, நவ. 12

உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழக வரத்தை வழங்குவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கலென்பிதுனுவெவ பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கல்விக்காகத் தான் பாரிய அளவில் முதலீடு செய்வதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

உலகில் அதிகளவான நாடுகள் தொழில்நுட்பத்தின் ஊடாக முன்னேற்றம் அடைந்துள்ளதாகவும், அது எமது நாட்டுக்குச் சிறந்த உதாரணம் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# முஸ்லிம் சமூகத்தை நிந்தனைப்படுத்திய ஞானசாரரை விடுதலை செய்ய வலியுறுத்தியவர் ஹிஸ்புல்லாவேதான்

## கல்முனைக் கூட்டத்தில் அமைச்சர் ரிஷாத் காட்டம்



கல்முனை,நவ.12

கடந்த அரசாங்கத்தில் மிக மோசமாக இனவாதத்தை விதைத்து, முஸ்லிம் சமூகத்தை நிந்தனைப்படுத்திய ஞானசார தேரரை விடுதலை செய்ய வேண்டும் என்று கூறியவர் ஹிஸ்புல்லாஹ்தான். அதனை அவர் தனது சுயநலத்துக்காவே செய்தார் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

ஒன்றிணைந்த புதிய ஜனநாயக தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரமதாஸவை ஆதரித்து ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தலைமையில் கடந்த சனியன்று இரவு கல்முனை சந்தாங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

அதில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் கூறியவை வருமாறு: –

இது ஓர் அழகான நாடு. இங்கு நாம் ஒற்றுமையாகவும் சுதந்திரமாகவும் வாழ வேண்டும். 30 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தில் நாம் இழந்தவை ஒன்றிரண்டல்ல.உயிர்களையும் உடைமைகளையும் சொத்துக்களையும் இழந்து அன்று வீதியில் நின்றோம்.

மீண்டும் இவ்வாறான ஒரு நிலைக்கு நாட்டை கொண்டு செல்லத் துடிக்கின்றார்கள். சஜித் பிரேமதாஸவுடன் ஒப்பந்தம் செய்ய வில்லை என்று சிலர் கூறுகிறார்கள். கடந்த 31 ஆம் திகதி என்னை மட்டுமல்ல அமைச்சர் ரவூப் ஹக்கீம் உட்பட முஸ்லிம், சிங்கள, தமிழ் தலைவர்கள், சமயப் பெரியார்கள் என இந்த நாட்டின் இரண்டு கோடியே 25 லட்சம் மக்களோடு செய்து கொண்ட ஒப்பந்தம்தான் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனமாகும்.

மேலும் இந்த நாட்டினுடைய தலைவரைக் கொண்டு வருவதற்கு நாங்கள் கட்சி பேதங்களை கடந்து ஏன் ஒன்றுபட்டிருக்கிறோம் என்று நீங்கள் சிந்திக்க வேண்டும். சாதாரண தேர்தலாக இதைக் கருத முடியாது. சிறுபான்மை மக்கள் தங்களது மத, இன, கலாசார விழுமியங்களை நிம்மதியாக நிறைவேற்ற – நமக்குரிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் – தேர்தலாக இது அமைந்திருக்கிறது.

சிறுபான்மை சமூகத்தின் ஆதரவு இல்லாமலே வெற்றி பெற்றுக் காட்டுவோம் என பேரினவாத சக்திகள், இனவாதத்தையும், மதவாதத்தையும் பேசி இந்த நாட்டை குட்டிச்சுவராக்கின். கடந்த ஆயிரத்து நூறு வருடங்களாக சமாதானத்தையும் ,இன ஒற்றுமையையும் பேணி வந்த சமூதாயத்தை அநியாயமாக கடந்த பத்து வருடங்களாக சீண்டி, நிம்மதியைக் குலைத்து, எமது வியாபார தளங்களையும் அடித்து நொறுக்கி, அட்டகாசம் செய்பவர்கள் – அந்த ஆட்சி காலத்திலும் இந்த ஆட்சி காலத்திலும் செய்பவர்கள் – ஒரே கூட்டத்தினரே.

ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் மினுவாங்கொடையிலும், கெப்படிபொலயிலும் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் சமூகத்தின் சொத்துகளையெல்லாம் சேதமாக்கினார்கள். மூன்று மாதம் கழித்து கைது செய்து பார்த்தால் அந்த மொட்டு கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் களும் ,பல வேட்பாளர்களும் இருந்தார்கள்.

அனைவரையும் பிடித்து சிறையில் அடைந்தது எங்களுடைய அரசு. அன்று அந்த அநியாயங்களை செய்த அமித் வீரசிங்க உட்பட அனைவரும் மொட்டு கட்சிக்கு ஆதரவாக நிற்கின்றனர். கடந்த அரசியலே நாங்கள் அமைச்சராக இருந்து போய் சொன்னோம், அவர்களது சிசிரிவி படங்களை போய் கொடுத்தும் அவர்கள் எவரும் கைது செய்யபடவில்லை. – என்றார்.




**நாளை**
**13.11.2019**
**புதன்கிழமை**
நட்சத்திரம்: கார்த்திகை மு.இ 11.19 வரை
திதி : பிரதமை மு.இ 8.37 வரை
இராகுகாலம் : 12.07 – 1.37
சுப நேரம் : 4.37 – 6.07

# 6 ஆம் திகதி சஜித்தின் வெற்றி உறுதியாகும் மொட்டு கட்சி கருகி காணாமல்போய்விடும்!

## அதன் பின்னர் சிறந்த நகைச்சுவை நடிகராக சிங்கள சினிமாவுக்குள் நுழைவார் கோட்டா



கொழும்பு, நவ. 12

நாட்டில் திரும்பும் திசையெல்லாம் சஜித்துக்கான வெற்றிக்கோஷமே ஓங்கி ஒலித்துக்கொண்டிருப்பதால் எதிரணியின் அரசியல் முகாம் ஆட்டம் கண்டுள்ளது. எனவே, எதிர்வரும் 18 ஆம் திகதி தாமரை மொட்டு கருகி காணாமல்போவது உறுதி. – என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான பரப்புரைகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையிலும் – கண்டி மாவட்டத்தில் வரலாற்று வெற்றியை பதிவு செய்யும் நோக்கிலும் – வேலுகுமார் எம்.பி. சூறாவளிப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

நேற்று மூன்றாவது நாளாகவும் கண்டி மாவட்டத்தில் பல பகுதிகளிலும் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. இதில் பங்கேற்று உரையாற்றிய வேலுகுமார் எம்.பி. மேலும் தெரிவிக்கையில் –

கோட்டாபய ராஜபக்ஷவே நாட்டின் காவலன் என்றும் .அவரே மீட்பார் என்றும் மக்கள் மத்தியில் மாயையை உருவாக்கி, இனவாதத்தையும், மதவாதத்தையும் கையிலெடுத்து – தேசப்பற்று தொடர்பில் தொண்டைக்கிழிய போலியாகக் கொக்கரித்து வெற்றிநடை போடலாம் என்றே ராஜபக்ஷாக்களும் அவர்களின் முகாமை சேர்ந்தோரும் திட்டம் போட்டனர்.

ஆனால் உண்மை என்னவென்பதை மக்களுக்கு நாம் தெளிவுப்படுத்திவிட்டதுடன், கூட்டு எதிரணியின் சூழ்ச்சி அரசியலையும் உரிய ஆதாரங்களுடன் அம்பலப்படுத்திவிட்டோம். இதனால் என்னசெய்வதென்று புரியாமல், ஏன்டா அரசியலுக்கு வந்தோம் என கோட்டாபய ராஜபக்ஷ விழி பிதுங்கி நிற்கிறார்.

அதுமட்டுமல்ல நாடு பூராகவும் சஜித் ஆதரவு அலை உருவாகியுள்ளதால், கோட்டாவின் முகத்தில் சோகம் குடிகொண்டுள்ளதை தற்போதே காணக்கூடியதாக இருக்கின்றது. ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டதும் அவரிடம் இருந்த அந்த வேகம் தற்போது இல்லை. ஹீரோபோல் நுழைந்தவரை இன்று 'கோமாளி' கிங் ஆக்கிவிட்டனர்.

சிங்கள மக்களும் இன்று தெளிவாக உள்ளனர். இதன்காரணமாகவே எங்கு சென்றாலும் சஜித், சஜித் என்ற நாமம் உச்சரிக்கப்படுவதைக் கேட்கக்கூடியதாக இருக்கின்றது.

மொட்டு மலரும் என வழிமீது விழிவைத்து காத்திருப்பவர்களுக்கு தேர்தல் முடிவுகள் பெரும் சோகமாகவே அமையும் என்பதால் முன்கூட்டியே அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன் – என்றார்.

# ஜனாதிபதி செயலகம் செல்வதற்கே கோட்டா விமானச்சீட்டு எடுத்தாராம்!

கொழும்பு, நவ. 12

கோட்டாபய விமானச்சீட்டு எடுத்தமை வெளிநாட்டுக்கு செல்வதற்குஅல்ல. ஜனாதிபதி செயலகம் செல்வதற்காகவே என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரித்து மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எங்களுக்குள் உள்ள உறவைக் குழைப்பதற்கு பொய்ப்பிரசாரம் பரப்பப்பட்டு வருகின்றது. இன்று கூறுகின்றனர் கோட்டாபய ராஜபக்ஷ ஒரு அமெரிக்கப் பிரஜை என்று. விமானச்சீட்டு எடுத்துள்ளாராம் வெளிநாட்டிற்குச் செல்வதற்கு. அவர் விமானச்சீட்டு எடுத்தன வெளி நாட்டிற்குச் செல்வதற்கு இல்லை. எதிர்வரும் 16 ஆம் திகதி ஜனாதிபதி செயலகம் செல்வதற்கு என்பதனை உறுதியாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன் – என்றார். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், நவ.05

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

மருதனார்மடம், ரொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பொயமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் – யாழ் நுண்கலைப்பீடம், அல்லைப்பிட்டி, மண்கும்பான், வெண்புறவிநகா, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பரமலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், வல்வெட்டித்துறை ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

கனகபுரம், அம்பாள்குளம், உருத்திரபுரம், ஜெயந்தி நகர், சிவநகர், கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில் -**

செட்டிக்குளம் நகர பிரதேசத்தின் ஒரு பகுதியிலும்,

**மன்னார் பிரதேசத்தில் -**

பொயபண்டிவிரிச்சான், சின்னப்பண்டிவிரிச்சான், மடு பிரதேசம் ஒரு பகுதி, மடு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# றோயல் பார்க் கொலைக் கைதி விடுதலைக்கு அநுர கண்டனம்!

கொழும்பு, நவ. 12

றோயல் பார்க் படுகொலைக் குற்றவாளிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுமன்னிப்பளித்தமைக்கு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

றோயல்பார்க் அடுக்கு மாடிக் குடியிருப்பில் சுவீடன் தந்தைக்கும், இலங்கைத் தாய்க்கும் பிறந்த யுவான் ஜேன்சன் என்ற 19 வயது யுவதியை மாடி யிலிருந்து தள்ளி விழுத்தி கொலை செய்த அன்ரனி ஜெயமஹ தற்போது பொதுமன்னிப்பில் விடுதலை யாகியுள்ளார்.

இந்த நடவடிக்கை, சட்டவிரோத மற்றும் நியாயமற்ற முடிவு, நீதித்துறை மீது பொதுமக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் புறக்கணித்துவிட்டது என்று அநுர தெரிவித்துள்ளார்.

பணக்கார வர்க்கத்தால் கட்டுப்படுத்தப்படும் ஊழல் நிறைந்த அரசமைப்புக்கு நாங்கள் சாட்சியாக இருக்கிறோம். இது சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளைச் சவால் செய்கிறது. நாட்டில் ஒழுக்கமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் சட்ட விதி ஒரு முக்கியமான தூணாகும் என்று நான் நம்புகிறேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த முடிவை இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதியை அவர் கேட்டுள்ளார்.

இந்த விவகாரத்தில் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலையீட்டையும் கோரியுள்ளார்.

# மன்னார் ஆயரிடம் ஆசி பெற்ற சிவாஜி



மன்னார், நவ. 12

ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை மன்னார் ஆயர் இல்லத்தில் சந்தித்து தனது தேர்தல் விஞ் ஞாபனத்தைக் கையளித்து ஆசி பெற்றார்.

அதனை தொடர்ந்து ஆயர் இல்லத்தில் ஓய்வுநிலை ஆயர் பேரருட் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகையைச் சந்தித்து ஆசி பெற்றார்.

இதில் முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் கலந்துகொண்டார்.

# மாமனிதர் ரவிராஜ் விருது மூவருக்கு வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 12

படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் 13ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு – சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ரவிராஜ் நினைவுப் பேருரையின்போது, மூன்று விருதுகள் வழங்கப்பட்டன.

அரசியல் சட்டம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலுக்கான ரவிராஜ் நிறுவனத்தினால், சமூகத்துக்கான பங்களிப்பை அங்கீகரித்து அமரர் ந.ரவிராஜ் ஞாபகார்த்த விருதாக மூன்று விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த விருதுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், அதற்கான சான்றிதழ்களை இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் வழங்கினர்.

நீராவியடிப் பிள்ளையார் ஆலயம், கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் ஆலயம் உள்ளிட்ட ஆலயங்களை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை மேற்கோண்டதற்காக, சிவசிறி விக்னராஜா ஐயர் பாலகுமார குருக்கள் அவர்களுக்கு சைவத் தமிழ் மரபுரிமை காவலுக்கான விருது, வழங்கப்பட்டது.

முகநூலில் பலரையும் ஒருங்கிணைத்து அநீதிக்கு எதிரான போராட்டங்களை நடத்தியதற்காக, சமூக ஊடகங்கள் மூலம் ஒருங்கிணைப்பு செயற்பாடு விருது தசைத் திறன் குறைபாடு நோயினால் பாதிக்கப்பட்டவரான ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஸுக்கு வழங்கப்பட்டது.

நந்திக்கடல் பேசுகிறது நூலை வெளியிட்டமைக்காக போருக்கு பின்னரான ஆவணப்படுத்தல் விருது – ஊறுகாய் இணைய ஊடகத்தின் இயக்குநர் நந்தகுமார் சஞ்சை மற்றும் நந்திக்கடல் பேசுகிறது நூலின் தொகுப்பாளரான ஊடகவியலாளர் ஜெரா ஆகியோருக்கு வழங்கப்பட்டது. (ஐ)

# அயோத்தி ஶ்ரீராம ஜென்ம பூமியில் பிரமாண்டக் கோவில் நிர்மாணப் பணிக்கு அடிக்கல் ஏப்ரலில் ராமநவமியன்று!


ஞாயிறன்று நடந்த ஏற்பாட்டுக் குழுக் கூட்டம்


கோவிலின் நிர்மாணப் பணிகளுக்கென முற்றிலும் கைவேலைப்பாடுகளுடன் தயாராகியிருக்கும் சலவைக்கல் தூண்கள்.

புதுடெல்லி,நவ.12

அயோத்தி ரீராம ஜென்ம பூமியில் சர்ச்சைக் குரிய நிலம் தொடர்பாகக் கடந்த சனியன்று இந் திய உச்சநீதிமன்றம் சனியன்று வழங்கிய தீர்ப் பைத் தொடர்ந்து, இந்து, முஸ்லிம் தலைவர்களு டன் மத்திய அரசு நேற்று முன்தினம் அவசர ஆலோசனை நடத்தியது. அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கான பணிகள் வருகிற ஏப்ரல் மாதம் தொடங்கும் என எதிர்பார்க்கப்படு கிறது.

இந்திய வரலாற்றில் பல நூற்றாண்டுகளாக இரு தரப்பினருக்கு இடையே நிலவி வந்த பிரச்சி னைக்கு உச்சநீதிமன்றம் சனியன்று முற்றுப்புள்ளி வைத்தது.

இந்தப்பிரச்சினையின் மையப்பகுதியாக விளங்கி வந்த, உத்தரபிரதேசத்தின் அயோத்தியில் உள்ள ராமஜென்ம பூமி - பாபர் மசூதி இடத்தின் உரிமை தொடர்பாக இறுதித்தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது.

சர்ச்சைக்குரிய அந்த 2.77 ஏக்கர் நிலத்தில் ராமர் கோவில் கட்ட அனுமதி வழங்கிய நீதிமன்றம் இதற்காக 3 மாதங்களுக்குள் அறக் கட்டளை ஒன்றை உருவாக்குமாறு மத்திய அரசுக்கு உத்தர விட்டது.

அதேநேரம் முஸ்லிம்கள் மசூதி கட்டுவதற்காக நகரின் முக்கியமான பகுதியில் 5 ஏக்கர் நிலத்தை சன்னி வக்பு வாரியத்துக்கு வழங்கவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரஞ் சன் கோகாய் தலைமையிலான அரசியல் சாசன அமர்வில் இடம்பெற்றிருந்த 5 நீதிபதிகளும் ஒரு மித்த கருத்தாக இந்தத் தீர்ப்பை வெளியிட்டனர். வரலாற்று சிறப்புமிக்க இந்த தீர்ப்பால் நீண்டகால பிரச்சினை ஒன்று முடிவுக்கு வந்துள்ளது.

அயோத்தி வழக்கின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வ தாக அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள் என அனைத்து பிரிவினரும் அறிவித்து உள்ளனர். மேலும் சன்னி வக்பு வாரியம் உள்ளிட்ட இந்த வழக்கின் மனுதாரர்களும் இத்தீர்ப்பை ஏற்கிறார் கள் என அறிவித்து இருந்தனர்.

இந்தத் தீர்ப்புக்குப்பின் நாட்டில் அமைதியை பராமரிப்பது தொடர்பாக நாட்டின் பல்வேறு பகுதி களை சேர்ந்த இந்து, முஸ்லிம் தலைவர்களுடன் மத்திய அரசு நேற்று முன்தினம் அவசர ஆலோ சனை நடத்தியது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தலைமையில், டெல்லியில் உள்ள அவரது வீட்டில் நடந்த இந்த ஆலோசனை கூட்டத்தில் பாபா ராம் தேவ், மவுலானா எம்.மதானி, அவ்தேசானந்த் கிரி, சுவாமி பரமாத்மானந்தா மற்றும் ஏராளமான மதத் தலைவர்களும், விஸ்வ இந்து பரித் அமைப்பு நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

சுமார் 4 மணி நேரம் நடந்த இந்த கூட்டத்தின் போது, நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு தெரிவிக்கிறார்கள் என இந்து, முஸ் லிம் தலைவர்கள் உறுதி அளித்தனர். குறிப்பாக, தற்போதைய சூழலை பயன்படுத்தி சில தேச விரோத சக்திகள் நாட்டுக்கு உள்ளேயும், வெளியே யும் நாட்டு நலனை பாதிக்கும் செயல்களில் ஈடுபடக் கூடும் என்று அச்சம் வெளியிட்ட அவர்கள், இந்த நடவடிக்கைகளுக்கு யாரும் இடம் கொடுக்கக் கூடாது என்றும் வலியுறுத்தினர்.

இந்த கூட்டத்தில் பங்கேற்ற தலைவர்கள் சார் பாக பின்னர் கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப் பட்டது. அதில் –

இந்தத் தீர்ப்பை எந்தத் தரப்புக்கும் வெற்றியா கவோ, தோல்வியாகவோ பார்க்கக் கூடாது. நாட்டின் நலனுக்கான தீர்ப்பாகவே கருத வேண்டும். இதை ஒவ்வொருவரும் மதிக்க வேண்டும் என்று குறிப்பி டப்பட்டு இருந்தது.

பல்வேறு சமூகங்களுக்கு இடையேயான உரை யாடல்களை எதிர்காலத்தில் தொடர வேண்டும் எனத் தலைவர்கள் அனைவரும் வலியுறுத்தினர் என வும், உயர்மட்ட மதத் தலைவர்களுக்கு இடையே யான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கு இந் தச் சந்திப்பு உதவியதாகவும் அந்த அறிக்கை யில் கூறப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் அயோத்தி வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பைச் செயல்படுத்துவதற்கான அடுத்தக்கட்ட பணிகளை மத்திய – மாநில அரசுக ளும், வழக்கில் தொடர்புடைய அமைப்புகளும் தொடங்கி உள்ளன. அதன்படி அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கான பணிகளை விரைவில் தொடங்க இருப்பதாக விஸ்வ இந்து பரித், ராம ஜென்மபூமி நியாஸ் உள்ளிட்ட அமைப்புகள் அறி வித்து உள்ளன.

ஏற்கனவே இந்த வழக்கின் விசாரணை நடந்து கொண்டிருந்த காலத்திலேயே ராமர் கோவிலுக் கான கட்டுமானப் பொருட்களை ராமஜென்மபூமி நியாஸ் அமைப்பினர் சேகரித்து வந்தனர். இதற் காக நாடு முழுவதிலும் இருந்து பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன. மேலும் கோவிலுக்கான தூண்க ளைத் தயார் செய்யும் பணிகளும் முழுவீச்சில் நடந்து வந்தது.

அங்கு 270 அடி நீளம், 128 உயரம், 140 அடி அகலத்தில் பிரமாண்டமான முறையில் கோவில் அமைய உள்ளது. முற்றிலும் கைவேலைப்பாடு கள் நிறைந்த சலவைக்கற்கள் மூலம் கட்டப்பட உள்ள இந்த கோவிலில் 5 வாசல்கள், 212 தூண் கள் அமைக்கப்படுகின்றன. இரும்பை பயன்படுத் தாமல் இந்த கோவில் கட்டப்படுவது தனித்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

கோவிலுக்கான தூண்களில் பாதிக்கு மேல் ஏற்கனவே தயார் நிலையில் இருக்கும் நிலையில், மீதமுள்ள தூண்களையும் சலவைக்கல்லில் செதுக் கும் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டு உள்ளன. தற்போது தீர்ப்பு வெளியாகி இருக்கும் நிலையில் இந்த பணிகள் வேகமெடுத்து உள்ளன. இதற்கு 4 ஆண்டுகளுக்கு மேல் ஆகும் எனக் கருதப்படு கிறது.

ராமர் கோவில் கட்டுமானப்பணிகள் குறித்து விஸ்வ இந்து பரித் அமைப்பின் சர்வதேச செயல் தலைவர் அலோக் குமார் கூறும்போது, ‘கோவில் பணிகள் எப்போது முடியும் என்பது குறித்த கால வரையறையை என்னால் கூற முடியாது. ஆனால் சட்ட நடைமுறைகள் அனைத்தையும் முடித்து விட்டு, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரை வில் கோவில் பணிகள் தொடங்கப்படும்’ என்று தெரிவித்தார்.

பிரபல கட்டடக் கலை நிபுணர் சோம்புரா ராமர் கோவில் கட்டடத்தை 1989 ஆம் ஆண்டு வடிவ மைத்து இருப்பதாகவும், அந்த வடிவமைப்பின்படி கோவிலை கட்ட வேண்டும் என்றும் அலோக்கும ார் கேட்டுக் கொண்டு உள்ளார்.

கோவில் கட்டும் பணி அடுத்த ஆண்டு (2020) ஏப்ரல் மாதம் தொடங்கும் என தகவல் வெளியாகி இருக்கிறது. ராம நவமி தினம் ஏப்ரல் மாதம் கொண் டாடப்படுவதால், அதையொட்டி கோவிலுக்கு அடிக்கல் நாட்டப்படும் என தெரிகிறது. தொடர்ந்து 5 ஆண்டு களில் இந்த பணிகளை முடிக்கவும் திட்டமிடப் பட்டு உள்ளது.

# முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் டி.என்.சேன் ஞாயிறு இரவு காலமானார்



*இந்தியாவின் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் டி.என். சேன் நேற்று மாரடைப்பினால் காலமானார். அவருக்கு வயது 86.*

*டி.என். சேன் கடந்த 1990 மற்றும் 1996 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் தலைமை தேர்தல் ஆணையராக பதவி வகித்துள் ளார். நாட்டின் தேர்தல் முறைகளில் பல்வேறு சீர்திருத்தங்களை கொண்டு வந்தவர் என்ற பெரு மைக்கு உரியவர்.*

*கடந்த சில வருடங்களாக வயது மூப்பு மற்றும் உடல் நலகுறைவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில், ஞாயிறு இரவு 9.30 மணியளவில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந் துள்ளார்.*

*அவரது மறைவுக்கு பிரதமர் மோடி டுவிட்டரில் இரங்கல் தெரிவித்து உள்ளார். அதில், டி.என். சேன் ஒரு திறமையான அரசு பணியாளர். அவர் இந் திய நாட்டிற்காக மிகுந்த அக்கறையுடனும் மற்றும் ஒருமைப்பாட்டுடனும் பணியாற்றியவர். தேர்தல் சீர்திருத்தங்களை நோக்கிய அவரது முயற்சிகள் நமது ஜனநாயகம் வலிமை பெறவும் மற்றும் முடிவு எடுப்பதில் பலரும் பங்கேற்கும் வகையிலும் அமை ந்தன. அவரது மறைவு வேதனை அளிக்கிறது. - எனத் தெரிவித்து உள்ளார்.*

# சிரியாவில் குண்டு வெடிப்பு: 8 பேர் பலி; 20பேர் காயம்

டமாஸ்கஸ்,நவ.12

சிரியாவில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் 8 பேர் பலியாகியுள்ளனர்.

சிரியா நாட்டில் துருக்கியின் கட்டுப்பாட்டில் இருக்கும் வடக்கு, கிழக்கு பகுதியில் உள்ள சுலுக் என்ற கிராமத்தில், நேற்று முன்தினம் ஒரு பேக்கரிக்கு அருகில்நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தில் இருந்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது.

இந்தக் குண்டுவெடிப்பு சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்தனர். மேலும் 20 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தக் குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு இதுவரை எந்த பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்காத நிலையில், துருக்கி அரசாங்கம் குருது போராளிகள் மீது குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த வாரம் சிரியா - துருக்கி எல்லைப் பகுதியில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் 14 பேர் உயிரிழந்த நிலையில் தற்போது இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



## உலகின் மிக வேகமான விமானத்தை மீண்டும் தயாரிக்க அமெரிக்கா முடிவு

அதிவேகமாகச் செல்லும் 'எஸ்.ஆர். - 71 கறுப்புப் பறவை (SR-71 Blackbird) விமானத்தை மீண்டும் தயாரிக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

1950களில் ரஷ்யாவுடனான பனிப் போரின் போது 'லொக்ஹீட் எஸ்.ஆர். 71 ' என்ற விமானத்தை அமெரிக்கா தயாரித்தது. இதுவரை தயாரிக்கப்பட்ட விமானங்களிலேயே அதிக வேகமாகவும், அதிக உயரமாகவும் பறக்கும் திறன் கொண்டது இந்த விமானம். 80 ஆயிரம் அடி உயரத்தில் மணிக்கு 3,600 கிலோ மீற்றர் வேகத்தில் அநாயசமாகப் பறக்கும் திறன் கொண்ட இந்த விமானம் கருப்பு வண்ணப் பூச்சுடன் வடிவமைக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாகவே அப்போதைய காலகட்டத்தில் ரேடாரில் சிக்காமல் தாக்குதல் நடத்தி வந்தது. எனினும், 1960ஆம் ஆண்டு அமெரிக்காவின் உளவு விமானமான யு 2 என்ற விமானத்தை ரஷ்யா சுட்டு வீழ்த்தியதைத் தொடர்ந்து எஸ்.ஆர். 71 விமானத்தின் பயன்பாட்டை அமெரிக்கா படிப்படியாக நிறுத்தி வைத்தது. தற்போது அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. மீண்டும் எஸ்.ஆர். ரக விமானத்தைத் தயாரித்துப் பயன்படுத்த முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# மிகப்பெரிய எண்ணெய்க் கிணறு ஈரானில் புதிதாகக் கண்டுபிடிப்பு

## 5,300 கோடி பரல்கள் மசகு எண்ணெயுடன்



தெஹ்ரான்,நவ.12

ஈரானில் 5,300 கோடி பரல்கள் வரை தரக்கூடிய புதிய மசகு எண்ணெய்க் கிணறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஈரான் உலகில் அதிக எண்ணெய் வளம் கொண்ட நாடுகளின் பட்டியலில் 4 ஆவது இடத்திலும், எரிவாயு ஏற்றுமதியில் 2 ஆவது இடத்திலும் உள்ளது.

ஈரான் அரசாங்கம் தீவிரவாதிகளுக்கு உதவிகள் செய்வதாகஜ் கூறி அந்நாட்டுடன் செய்யப்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியது.

மேலும் அமெரிக்க அரசாங்கம் ஈரான் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்தது. இந்தியா உள்ளிட்ட நாடுகள் ஈரானிடம் மசகு எண்ணெய் இறக்குமதி செய்யக் கூடாது எனவும் தடை விதித்துள்ளது.

இது பொருளாதார ரீதியாக ஈரானுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில், ஈரானில் புதிதாக மிகப்பெரிய மசகு எண்ணெய்க் கிணறு கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாக அந்நாட்டின் அதிபர் ஹசன் ரவுகானி நேற்று அறிவித்துள்ளார்.

சுமார் 5,300 கோடி பரல் மசகு எண்ணெய் தரும் இந்தப் புதிய எண்ணெய்க் கிணறு, ஈரானின் தென் மேற்கு பிராந்தியமான குசெஸ்தானில் அமைந்துள்ளது.

## மருத்துவ சிகிச்சைக்காக நவாஸ் ஷெரீப்பை வெளிநாட்டுக்கு அனுப்ப பாக். அரசு அனுமதி



இஸ்லாமாபாத்,நவ.12


பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ள நிலையில் சிகிச்சைக்காக அவர் வெளி நாட்டு பயணம் மேற்கொள்வதற்கு அனுமதிக்க பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தானில் நீண்ட காலமாகப் பிரதமராக இருந்தவர் எனப் பெயர் பெற்றவர் நவாஸ் ஷெரீப். மூன்றாவது முறை பிரதமரான நிலையில் ஊழல் வழக்கால் ஆட்சி அதிகாரத்தை இழந்து சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். சிறையில் மாரடைப்பு ஏற்பட்டு உடல் நலம் பாதிக்கப்பட்டது.

மருத்துவர்கள் நவாஸ் ஷெரீப் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார் எனக் கூறினர். இதையடுத்து அவருக்கு வெளிநாட்டில் சிகிச்சையளிக்க அவர் குடும்பத்தினர் அனுமதி கோரினர்.

இதற்கான சட்ட ரீதியான தடைகள் நீக்கப்பட்டுவிட்டன எனவும் விரைவில் நவாஸ் ஷெரீப் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார் எனவும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குரேஷி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## இரண்டாவது அணு உலைக்கான பணிகளைத் தொடங்கியது ஈரான்



தெஹ்ரான்,நவ.12

அமெரிக்காவின் கடும் எதிர்ப்பையும் மீறி ஈரான் தனது இரண்டாவது அணு உலையின் கட்டுமானப்பணியைத் தொடங்கியுள்ளது.

தெற்குத் துறைமுக நகரமான புஷேர்ல்ரஷ்யாவின் உதவியுடன் இந்த அணு உலையின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய விருப்பதால், ஆண்டுக்கு 66 கோடி டொலர்கள் மிச்சமாகும் என அந்நாட்டு அணுசக்தித் துறைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அணு உலை மூலம் மின்சாரம் மட்டும் தயாரிக்கப்படுகிறதா அல்லது அணு ஆயுதம் தயாரிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கும் வகையில் அங்கு சீனா, ரஷ்யா மற்றும் ஐரோப்பியப் பொறியாளர்களை பணியிலிருக்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது. முன்னதாக ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதாகக் கூறி அமெரிக்கா அந்நாட்டுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளைவிதித்துள்ளதுஎன்பது குறிப்பிடத்தக்கது




# வாழ்க்கைக் கிரிக்கெட்

உள்ளம் சற்றுச் சோர்ந்திருந்தது. தொலைக்காட்சியின் முன் உட்கார்ந்திருந்தேன். மனம் ஒருநிலைப்படாததால் எண்ணங்கள் எங்கோ இருக்க, கண்கள் மட்டும் தொலைக்காட்சியில். ஒருப்படாத மனத்தின் இயல்பால், விரல்கள் 'றிமோட்' மூலம் 'சனல்களை' மாற்றியபடி. ஆஸ்திரேலிய, இந்தியக் 'கிரிக்கெட் மச்' டெண்டுல்கர் விளாசிய பந்து, 'பௌன்றி' யைத் தாண்ட, 'ஹோ' என ஆயிரமாய்த் தலைகள் ஆர்ப்பரித்து எழுந்தன. 'பதினொரு முட்டாள்கள் விளையாட, பதினோராயிரம் முட்டாள்கள் பார்க்கும் விளையாட்டு.' 'பேனார்ட்ஷா' கருத்துச் சரியாய்ப் பட்டது. சலிப்போடு விரல்கள் தொலைக்காட்சியை அணைக்கின்றன. மனச்சோர்வு விரிகிறது.

மனச்சோர்வின் காரணம் சொல்ல மறந்துவிட்டேன். சமூகம் பற்றிய அக்கறையோடு, அண்மையில் ஒரு சிறு சஞ்சிகையில் நான் எழுதியிருந்த கட்டுரை, சர்ச்சையைக் கிளப்பியிருந்தது. தரமற்ற வார்த்தைகளால் தகுதியற்ற ஒருவர் எழுதியிருந்த மறுப்பை, பொறுப்பற்ற முறையில் அதே சஞ்சிகையின் ஆசிரியர் வெளியிட்டிருந்தார். தனி மனித தாக்குதல் முயற்சி. நடுவு நிலைமையாய் நடித்து மற்றொரு பத்திரிகை, அதை மறு பிரசுரம் செய்திருந்தது. வழிமொழிந்து வன்னிப் பத்திரிகையில் இன்னொரு கட்டுரை. இப்படியாய் என் தலை இஷ்டப்படி உருட்டப்பட்டது. என் எழுத்து மருந்து வேலை செய்ததில் எனக்கு ஏகப்பட்ட சந்தோசம். இருபதாண்டுகளாக இதுஎனக்குப்பழக்கப்பட்டதுதான். சோர்வுக்குக் காரணம் அதுவல்ல.

***

என்னைத் தாக்கி எழுதியவர் பற்றி எனக்குக் கவலையில்லை. எழுதாதவர்கள் பற்றியே அதிகம் கவலைப்பட்டேன். அறிவுலகம், அறிவுலகம் என அதிகம் பிதற்றிக் கொள்ளும் பலரும், ஒரு சமூகப் பிரச்சினை பற்றிய எனது கருத்தை, மறுக்கவோ, ஆதரிக்கவோ செய்யாமல் மௌனம் காத்தனர். 'அட்ரஸ்' இல்லாத ஒருவரின் வெற்று ஆர்ப்பரிப்பை தட்டிக் கேட்கும் வலிமையின்றி, என்னிடம் தனிப்பட்ட முறையில் தொலைபேசியில் 'உச்' சுக் கொட்டினர். 'வெறும் பெட்டைப் புலம்பல்.' அறிவாளிகளாய்த் தம்மைத்தாம்பிரகடனப்படுத்தும்பெரியமனிதர்களின், அந்த 'நபுஞ்சகத்' தன்மை எரிச்சலூட்டியது.

***

பாஞ்சாலி துகில் உரியப்படுகையில் பார்த்திருந்த, துரோணரும், கிருபரும், பீஷ்மரும் நினைவில் வந்தனர். பாண்டவர்க்குப் புத்தி சொல்லும் பலம் மட்டுமே அவர்களிடம். துரியோதனனிடம் பேசினால் தூக்கியெறியப்படுவார்கள். தாம் துகிலுரியப்படாததும் தனிக் கௌரவம் நோக்கி, தலை தாழ்த்தி அமர்ந்திருந்தனராம் அவர்கள். அவர்களின் இயலாமைக்கு பொறுமை என்ற புகழாரம் வேறு. கொதித்தெழுந்த இளைய விகர்ணனை மடக்க மட்டுமே அவர்தம் மதிக்கு வலிமை. பாரதம் படிக்கும் பொழுதே பதறியிருக்கின்றேன். பின்னால் அம்புப் படுக்கையில் அழுந்திய அவர்கள் நிலைக்கு, பாவத்தைப் பார்த்திருந்த குற்றமே, காரணமாய் எனக்குப்படும்.

***

இன்று பாஞ்சாலியாய் நான். துரியோதனன் உத்தரவால் துச்சாதனன் ஆர்ப்பரித்துத் துகிலுரித்தான். களம் அமைத்துக் கொடுத்து, பின் அதற்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான் கண்ணில்லாத் திருதராட்டினன். விளையாட்டுப் பிள்ளையின் விருப்புக்காக தான் அமைத்துக் கொடுத்த களம், தன் தேசத்தையே அழித்து விடுமோ எனும் அச்சம் அவன் மனதில். களம் அமைத்துக் கொடுத்து பின், துரியோதனனைக் கண்டித்த அவன் வார்த்தைகளில், சத்தியத்தின் வலிமை இல்லை. பாண்டவரைப் பார்க்கும் திறனின்றி, குருடே தகுதியாய்ப் போக, குனிந்திருந்தான் அவன்.

***

வஞ்சகச் சகுனி வழிமொழிந்து ஆர்ப்பரித்தான். பிழையென்று தெரிந்தும் பெற்ற உதவிக்காய் கர்ணனும் ஏதேதோ கதையளந்தான். ஆன்றோர் அமைதி காத்தனர். கண்ணன் மேற்கொண்ட நம்பிக்கையால் கழராது துகிலெனும் உறுதியுடன், கை தூக்கி நின்றாள் பாஞ்சாலி. மீண்டும் பாரதம். சலிப்பின் காரணம் இது.

***

புத்தியின் உத்தரவின்றியே, கை, தொலைக்காட்சியை மீண்டும் போடுகின்றது. பழையபடி அதே ஆயிரமான தலைகளின் ஆர்ப்பரிப்பு. இப்பொழுது டெண்டுல்கர் 'அவுட்' டாகியிருந்தார். வெற்றிக்கும் ஆர்ப்பரிப்பு. தோல்விக்கும் ஆர்ப்பரிப்பு. உலகின் இயல்பு தெரியாமல் புத்தி குழம்பிற்று.

***

'ஹலோ! என்ன யோசனையாய் இருக்கிறியள்? ஓ, டெண்டுல்கர் 'அவுட்டேங்கோ?' ' ஒவ்வொரு எழுத்திலும் உற்சாகம் பொங்க, வார்த்தைகளை வாரியிறைத்து உள் நுழைகிறார் நண்பர் யோகநாதன். அது அவரது இயல்பு. இவ்வளவு மகிழ்ச்சியான மனிதன் எப்படித்தான் 'கஸ்ரம்ஸ்' அதிகாரியாக இருக்கின்றாரோ? மற்றவர்களை மிரட்டவும் இவரால் முடியுமா? – எப்பொழுதும் நினைப்பேன். சோர்ந்திருந்த மனம், அவர் வருகையால் சற்று மலர்ந்தது. 'என்ன, வழக்கமான சிரிப்பைக் காணேல? ஏதாவது பிரச்சினையே?' அவர் வார்த்தைகளில் இருந்த கரிசனை ஈர்க்க, முன்னர் உங்களுக்குச் சொன்ன பிரச்சினைகள் அத்தனையையும், கொட்டி முடித்தேன்.

***

ஹா.......... ஹா........ஹா .......... ஹா........ நாக்கைக் கடித்தபடி அவரது வழமையான சிரிப்பு. எல்லோருக்கும் வாய் மட்டுந்தான் சிரிக்கும். பாவி மனிசனுக்குக் கண்ணும், மூக்கும் சேர்ந்து சிரித்தன. அது அவரது தனி முத்திரை. 'சீரியஸான' என் கருத்தைக் கேட்டுச் சிரிக்கும் அந்த மனிதரில் எரிச்சலுண்டானது. முகத்தில் சலிப்புக் காட்டினேன். 'என்னங்கோ இதுக்கெல்லாம் யோசிக்கிறியள். சின்னப் பிரச்சினை விடுங்கோ. 'காய்ச்ச மரந்தான் கல்லெறிபடும்' யோசியாதேங்கோ.' பலரும் சொல்லும் பழமொழியை, தன் கண்டு பிடிப்பாய் எடுத்து விட்டார். நான் சொல்ல வந்தது அவருக்குப் புரியவில்லையோ எனப்பட்டது. 'ஐயா! எறி பட்டதில எனக்குத் துளியும் கவலையில்லை. எவனும் எவனுக்கும் எறியலாம் கேட்க ஒருவரும் இல்லை என்ற, சமூகத்தின் பொறுப்பின்மைதான் கோபமாய்க் கிடக்கு.' ஹா.......... ஹா........ஹா .......... ஹா........ மீண்டும் அதே வில்லன் வீரப்பா சிரிப்பால் எரிச்சலூட்டினார்.

***

இவரோடு பேசிப் பிரியோசனம் இல்லை. – உள்ளம் உரைத்தது. 'எப்பிடி உங்கட 'கஸ்ரம்ஸ்' எல்லாம் பிரச்சினை இல்லாமல் போகுதோ?' கதையை மாற்றினேன். 'என்னங்கோ நான் கதைக்கிறது பிடிக்கேல்லைப் போல – கதையை மாத்திறியள்.' மனிதர் என் மனதின் நாடி பிடித்து மடக்கினார். 'சிரிக்காம என்னால ஒண்டையும் கதைக்க முடியாதுங்கோ, அதுக்காக 'சீரியஸ்' விளங்காதவன் என்று நினைக்கப்படாது. கொஞ்சம் பொறுமையா என்ட கதையக் கேளுங்கோ?' மனிதர் ஏதோ அறுக்கப் போகிறார் என சற்று மனம் சலிக்கிறேன். ஆனாலும் முகம்மறுக்க முடியாத உறவு கேட்க வைக்கிறது. எதைப் பற்றியும் கவலையில்லாமல் தொடர்ந்தார் அவர்.

***

'இப்ப உந்த ரி.வி.யில என்னங்கோ பார்த்தனீங்கள்?' – அவர் 'கிரிக்கெட் மச் போகுது.' நான்: 'அதைப் பார்த்த பிறகுமோ யோசனை?' – மீண்டும் அவர் 'எனக்குக் 'கிரிக்கெட்' பிடியாது வேலையில்லாத விசரங்களின்ட பொழுதுபோக்கு.' – சலித்தேன். 'என்னைத்தான் விசரன் என்றியள் போல?' வார்த்தைகளால் முகத்தில் எற்றினார். – அது அவர் பாணி. வார்த்தைகளின் அர்த்தம் அறியாது பேசி விட்ட நாணம் தாக்கியது. 'சீச்சீ உங்களைச் சொல்லேல, பொதுவா......' இழுத்தேன். 'நீங்கள் ஆரைச் சொன்னாத் தான் என்ன? ஒரு விதத்தில உலகத்தில இருக்கிறஎல்லாரும் விசரங்கள் தான்.' மனுசன் ஞானியாய்ப் பேசினார். மனதுக்குள் மதிப்புயர அவரை அண்ணாந்து பார்க்கிறேன்.

***

'நான்சொன்னதநீங்கள்விளங்கேலப்பாருங்கோ, உங்கள நான் 'கிரிக்கெட்' ரசிக்கச் சொல்லேல, 'கிரிக்கெட்' விளையாட்டப் பார்த்தால் வாழ்க்கைய விளங்கிக் கொள்ளலாம். நீங்கள் புத்திசாலி அதப் பார்த்து உலகத்த விளங்குங்கோ எண்டுதான் சொன்னனான்.' ஹா.......... ஹா........ஹா .......... ஹா........ பேச்சின் இலவச இணைப்பாக ஏனென்று தெரியாத ஒரு சிரிப்பு. 'என்னது 'கிரிக்கெட்டப்' பார்த்து வாழ்க்கய விளங்கலாமோ? அதெப்பிடி?' – இது நான். ஹா.......... ஹா........ஹா .......... ஹா........ 'அப்பிடிக் கேளுங்கோ? அதக் கொஞ்சம் விளங்கப்படுத்தவே? உங்களுக்கு நேரம் இருக்கோ?' வெகுளித்தனமாய்ப் பேசினாலும் வார்த்தைகளில் நாகரிகம் காட்டினார்.

***

ஏதோ புதிதாய்ச் சொல்கிறார் என்ற அளவில், அவர் கருத்தைக் கேட்க மனம் ஆர்வப்பட்டது. நேரமும் இருந்ததால் சற்றுக் காது கொடுத்தால் என்ன? எனப்பட்டது. விளையாட்டைப் பற்றி விளையாட்டாய்ப் பேசும் மனிதரிடம், விளையாட்டாய்ப் பொழுது போக்க முடிவு செய்தேன். 'அது என்ன பாருங்கோ 'கிரிக்கெட்டில' வாழ்க்கையைப் படிக்கிறது. கனபேர் வாழ்க்கையே விளையாட்டென்கிறாங்கள். நீங்கள் விளையாட்டை வாழ்க்கை என்கிறீங்கள். சரி, உங்கட கண்டு பிடிப்பையும் ஒருக்காக் கேப்பம் சொல்லுங்கோ?' உத்தரவு கொடுத்தேன். அவரது குதூகலம் எனக்குள்ளும் தொற்றிக் கொள்ள சற்று உற்சாகமாகியிருந்தேன். அவருக்கு ஆனந்தம். ஹா...... ஹா.... ஹா..... ஹா... மீண்டும் தேவையில்லாத ஆனால், கொஞ்சம் ரசிக்க வைக்கும் சிரிப்பு.

***

அடிக்கடி வந்து, அச்சிரிப்பு தன்னைப் பழக்கப் படுத்தியிருந்தது. வினோதமாய் அவரை ரசித்தபடி அவர் சொன்னவற்றைக் கேட்கத் தொடங்கினேன். விளையாட்டாய் அவர் தொடங்கிய பேச்சு, 'கிரிக்கெட்டைப்'போலவே, போகப் போக விறுவிறுப்பானது. உற்சாகப்பட்டேன். நான் உற்சாகப்பட, உற்சாகப்பட, சபையின் ஆர்ப்பரிப்புக் கண்ட 'கிரிக்கெட்' வீரனாய் அவர் எழுச்சி கொண்டார்.

அவர் விளாசிய வார்த்தைப் பந்துகள் என் அறிவுப் 'பௌன்றி'யைக் கடந்து, 'சிக்ஸர்' களாய் விழுந்தன. ஒரு விளையாட்டான மனிதர் விளையாட்டைப்பற்றி, விளையாட்டாகச் சொன்ன செய்தி, மிகச் 'சீரியஸ்சாய்' இருந்தது. என் அகத்துள் அடைபட்டுக் கிடந்த ஆயிரம் கதவுகள் திறந்தன. உள்ளே பாய்ந்த ஒளியில், என் சோர்விருள் கலைந்தது. தட்சணாமூர்த்தியாய் மனிதர் தரிசனம் தந்தார். அவர் சொன்ன அந்த அற்புதச் செய்திகளை உங்களோடு பகிர்ந்து கொள்வதற்கே இக்கட்டுரை. இதோ! அவர் சொன்ன பாணியிலேயே, அவர் சொன்ன செய்திகள். படித்துப் பாருங்கள்.

(09 ஆம் பக்கம் பார்க்க)




(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

***

'அப்ப நான் சொல்லுறதக் கேக்கப் போறியள் பெரிய சந்தோசமுங்கோ. இப்ப நான் ஒரு வகுப்பெடுக்கப் போறன் பாருங்கோ. நான் கேக்கிற கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்ல வேணும்' ஹா.......... ஹா........ஹா .......... ஹா........ அதே சிரிப்பு.

***

'இப்பிடி அடிக்கடி சிரிப்பன் யோசிக்கப்படாது.' அவருக்கே அது சற்று மிகையாய்ப் பட்டிருக்கும் போலும் – தொடர்ந்தார். 'இப்ப 'ரி.வி. ஸ்கிரீனைப்' பாருங்கோ. எத்தினபேர் விளையாடினம்? சொல்லுங்கோ பார்ப்பம்.' ஐயத்திற்கே இடமில்லாத கேள்வி. ஆனாலும் பதில் சொல்கிறேன். 'இரண்டுபேர் '(ப்)பட்' பண்ணுகினம். பதினொருபேர் '(க்)பீல்ட்' பண்ணுகினம்.' 'இதிலயிருந்து உங்களுக்கு என்ன விளங்குது? 'மீண்டும் அவரிடமிருந்து கேள்வி.

***

'விளங்கிறதுக்கு என்ன இருக்கு? மொத்தம் பதின்மூண்டுபேர் விளையாடினம் எண்டு விளங்குது.' – சலிப்பைப் பதிலாக்குகிறேன். 'இந்த நக்கல் தானுங்கோ வேண்டாமென்னுறது. நல்லா யோசிச்சுச் சொல்லுங்கோ! என்ன விளங்குது?' எனக்குள் எரிச்சல். 'எனக்குத் தெரியேல நீங்களே சொல்லுங்கோ.' என்றேன் 'சரி, நானே சொல்லுறன். உலகத்தில இரண்டுபேர் சாதனை செய்ய நினைச்சால், பதினொருபேர் அவங்கள 'அவுட்' டாக்க நினைப்பாங்கள். இதுதான் 'கிரிக்கெட்டிலிருந்து' படிக்கிற முதல் வாழ்க்கைப் பாடம்' ஹா.......... ஹா........ஹா .......... ஹா........ அவர் சொன்ன செய்தியால், அறிவில் ஒரு மின்னல் தெறிக்க, முதல்த்தரமாய் அவர் சிரிப்பில் மதிப்புண்டாகிறது.

***

' சரி இனி அடுத்த விசயத்துக்கு வருவம். இரண்டு 'ரீமிலும்' பதினொருபேர்தானே விளையாட இருக்கினம்?' 'ஓம்' – இது நான். 'அப்ப ஏன் பாருங்கோ 'அவுட்' டாக்க பதினொருபேரும் விளையாட, 'ஸ்கோர்' எடுக்க இரண்டே இரண்டு பேர் மட்டும் விளையாடுகினம்? அது எப்பிடியுங்கோ நீதியாகும்?' வழமையில் ஊறி, மேற்சொன்ன விடயம் பற்றி இதுவரை சிந்திக்காத புத்தி, நியாயமுள்ள அவரின் புதுக் கேள்வியால் அதிர்ந்தது.

***

'அது........... அது வந்து...........' நான் தடுமாற, – தொடர்கிறார் அவர். 'அது சரியோ, பிழையோ எண்டு, 'கிரிக்கெட்' காரர் முடிவு செய்யட்டும் பாருங்கோ, நாங்கள் வாழ்க்கையைப் படிப்பம். தர்மத்திற்கும் அதர்மத்திற்கும், எப்பவும் சமமாய்த்தான் ஆக்கள் சேருவினம். ஆனால், பிரச்சினையெண்டு வந்திட்டால், தர்மத்தை விழுத்திறத்துக்கு, அதர்மக்காரரெல்லாம் ஒண்டாய் நிற்பாங்கள். ஆனால், தர்மக்காரர், ஒவ்வொருத்தராய்த்தான் துணைக்கு வருவினம்.' அவர் நிறுத்த, – 'இது தர்மக்காரரின் பலயீனம் என்கிறீயளோ?' நான் கேட்கிறேன். 'இல்ல, பலம் என்னுறன்.' 'அதெப்பிடி?' 'பதினொரு அதர்மக்காரரை எதிர்க்க இரண்டு தர்மக்காரர் போதும். அதனால்த்தான் இரண்டுபேரை விளையாட விட்டிட்டு மற்ற தர்மக்காரர் பார்த்துக் கொண்டிருப்பினம்;. அது பலயீனமில்ல, பலமுங்கோ. இப்ப விளங்குதே உலகம்?' ஹா.......... ஹா........ ஹா .......... ஹா........ என் மனத்துள் அவர் சிரிப்பின் மதிப்பு மேலும் உயர்கிறது.

***

'என்ன களைச்சுப் போனீங்களே? இன்னுஞ் சொல்லவோ அல்லது இவ்வளவத்தோட விடவோ?' விசயம் என்னை ஈர்ப்பது தெரிந்து மனுசன் மவுசு காட்டினார். 'வலு திறமாய் இருக்குது பாருங்கோ, எவ்வளவு வேணுமென்டாலும் சொல்லுங்கோ, கேட்க நான் தயார்.' – வெளிப்படையாய்ச் சரணடைந்தேன். அவருக்கு அளவில்லாத உற்சாகம்.

***

'சரி. திரும்ப மைதானத்தைப் பாருங்கோ. '(ப்)பட் பண்ணுறவையள் எங்க நிற்கினம்?' 'பிச்சுக்குள்ள' '(ப்)பீல்ட் பண்ணுறவை?' 'கிரவுண்ட்ஸ் முழுக்க நிற்கினம்.' 'இப்ப தெரியுதே? 'ரண்ஸ்' எடுக்கிறவ 'பிச்'சுக்குள்ள நிண்டுதான் விளையாட வேணும். 'அவுட்' டாக்கிறவ எங்க நிண்டும் 'அவுட்' டாக்கலாம். இதிலயிருந்து என்ன விளங்குதுங்கோ?' – அவர் கேட்க, 'தர்மம் பற்றிச் சிந்திப்பவனுக்குத்தான் வரம்புகள். அவன விழுத்த நினைக்கும் அதர்மக்காரருக்கு எந்த வரம்பும் இல்ல.' நான் விளங்கியதைச் சொல்கிறேன். 'அட, பிடிக்கத் தொடங்கியிட்டியள்.' ஹா.......... ஹா........ ஹா .......... ஹா........ மீண்டும் சிரிக்கிறார்.

***

'சரி, இன்னுஞ் சொல்லுங்கோ?' – இப்பொழுது நானே ஆர்வப்படுகிறேன். 'ஒரு பெரிய ரகசியம் சொல்லட்டே?' – குரலில் இரகசியம் காட்டிப் பரபரப்பூட்டினார். 'சொல்லுங்கோ.' 'இப்ப டெண்டுல்கர் அவுட்டாகினதைப் பார்த்தனிங்கெல்லே? என்னண்டு அவர் 'அவுட்' டாகினவர்?' 'ரண் அவுட்' என்றேன். 'கொஞ்சம் விளக்கமாச் சொல்லுங்கோவன்?' 'எதிர்ப்பக்கத்தில் நின்ற 'பட்ஸ்மென்' அவசரப்பட்டு ஓடிவர, அவரைக் காப்பாற்ற இவரும் ஓட, இவையளிட தடுமாற்றத்தைப் பயன்படுத்தி, அவங்கள் 'அவுட்' டாக்கிப் போட்டாங்கள்.' – நான் சொன்னதும், ' இதில இருந்து என்ன விளங்குது?' –மீண்டும் அவரிடமிருந்து கேள்வி. 'நீங்களே சொல்லுங்கோ?' 'எங்கள, எதிரிகள் மட்டும் விழுத்திறதில்ல. சில நேரத்தில சேர்ந்து நிக்கிறவங்களே விழுத்திப் போடுவாங்கள். இது எப்படியிருக்கு?' – ரஜினி போல 'ஸ்ரைல்' காட்டி மீண்டும், ஹா.......... ஹா........ஹா .......... ஹா........ இப்பொழுது அந்தச் சிரிப்பு என்னிலும் தொற்றிக் கொள்கிறது.

***

'முடிஞ்சுதோ? இன்னும் இருக்குதோ?' 'இனித்தான் முக்கியமான விசயமே இருக்குதுங்கோ.' இயல்பாகவே பெருத்திருந்த முழியை மேலும் பெருப்பித்து உருட்டுகிறார். 'அதென்ன முக்கியமான விசயம்?' 'கொஞ்சம் முந்தி டெண்டுல்கர் அடுத்தடுத்து மூண்டு 'சிக்ஸர்' அடித்தவர் பார்த்தனீங்களே?' 'ஓம்' 'அப்ப 'கிரவுண்டுக்குள்ள' இருந்த சனம் என்ன செஞ்சது?' 'அதையேன் கேட்கிறியள்? பெரிய ஆர்ப்பாட்டம் தான், சத்தத்தில காது கிழிஞ்சுது.' 'சரி. இப்ப டெண்டுல்கர் 'அவுட்டானவர்' எல்லே?' ' ஓமோம்.' 'அப்ப சனம் என்ன செஞ்சது?' 'அப்பவும் பெரிய சத்தமும் ஆர்ப்பாட்டமுந்தான்.' 'இதிலயிருந்து என்ன விளங்குது?' நான் யோசிப்பதற்குள் அவரே தொடர்ந்தார். 'சனம், வெண்டாலும் கை தட்டும், தோத்தாலும் கை தட்டும். 'சிக்ஸ்' அடிச்சவனுக்கும் கை தட்டும். 'கச்' பிடிச்சவனுக்கும் கை தட்டும். எப்பவும் சனங்கள் இப்பிடித் தானுங்கோ. விளையாட இறங்க முன்னரே இது தெரிய வேணும். விளங்குதே?' சிரிப்பின்றியே இம்முறை பதில் வருகின்றது. அவர் சிரிப்பு, தன்னைத் தேட வைத்து வெற்றி காட்டியது.

***

'இன்னொரு விசயம் கவனிச்சனிங்களே?' அவரே தொடர்ந்தார். 'எதைச் சொல்லுறீங்கள்?' 'கொஞ்ச நேரத்துக்கு முந்தி, '(ப்)போல்' போட்டவர் ஸி.ய.நி எண்டு கத்தினவரல்லே?' 'ஓம்.' 'அது ஸி.ய.நி வே?' 'அப்பிடித்தான் கிடந்தது.' 'அவர் கத்தினவுடன சனம் என்ன செஞ்சதுங்கோ?' 'அவுட்தான் எண்டு நினைச்சு அப்பவும் ஆர்ப்பரிச்சது.' 'கூட விளையாடினவங்கள் என்ன செய்தவங்கள்?' '(ப்)போலரோட சேர்ந்து கையையும், காலையும் ஆட்டி, 'அவுட்' 'அவுட்' எண்டு அம்பயரை நோக்கிக் கூவினவங்கள்.' ' 'அவுட்' டெண்டு ஆர்ப்பரிச்சது எத்தனை பேர்?' 'அது ஒரு ஐயாயிரம், பத்தாயிரம்பேர் இருக்கும்." 'அவுட்', அவுட்' எண்டு, அம்பயரை வெருட்டினவங்கள் எத்தனை பேர்?' '(ப்)பீல்ட்' பண்ணின பதினொரு பேர்.' 'அப்ப மொத்தம் 'அவுட்' டுக்கு ஆதரவாய் இருந்தது எத்தனைபேர்?' 'என்ன கணக்குப் பாடம் நடத்திறீங்களோ?' 'உதுதானே வேண்டாம் என்னுறது, கேட்டதற்குப் பதில் சொல்லுங்கோ."சரி. பத்தாயிரத்துப் பதினொரு பேர்' 'பத்தாயிரத்துப் பதினொரு பேரும் கத்தேக்க, '(ப்)பட்' பண்ணின டெண்டுல்கர் என்ன செய்தவர்?' 'ஒண்டும் பேசாம மௌனமா நிண்டவர்.' 'பிறகென்ன நடந்தது?' ' 'அவுட்' இல்லயெண்டு சொல்லியாச்சு.' 'அதச் சொன்னது யார்?' 'அம்பயர்' ' 'அம்பயர்' எத்தின பேர்?' 'மெயினானவர்' ஒரு ஆள்த்தான்.' ' அப்ப பத்தாயிரத்து பதினொரு பேரை எதிர்த்து, ஒராள் சொன்னவரோ?' 'ஓம்.' ' அது எடுபட்டதோ?' 'ஓம். அதுதானே எடுபடும்.' 'அதெப்பிடி? கனபேர் சொன்னதுக்கு எதிரா, ஒராள் சொன்னது எடுபட்டது.' 'அவர் சொன்னது உண்மையெண்டபடியால்.' 'அவர் சொன்னவுடன, 'அவுட்'டெண்டு சொன்னவங்கள் எல்லாம் என்ன செய்தவங்கள்?' 'பேசாமல் அடங்கிப் போனாங்கள்.' 'இதிலயிருந்து என்ன தெரியுது?' 'நீங்களே சொல்லுங்கோ?' இப்போது, ஒரு சீடனின் பக்குவம் என் வார்த்தைகளில்.

***

' 'அவுட்' டாகாத ஒருவன 'அவுட்' டாக்க, எதிர்த்து விளையாடுறவன் பொய்யா முயற்சிப்பான். அவன் சொன்னது சரியெண்டு சொல்லவும், ஆர்ப்பரிக்கவும், ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்யும். ஆனால் அதால மட்டும் ஒராள 'அவுட்'டாக்க முடியாது. அவ்வளவு பெரிய கூட்டத்திற்கு எதிரா, உண்மையைச் சொல்ல ஒருவன் இருப்பான். அவன் அதுக்கெண்டு நியமிக்கப்பட்டவன். உங்கட தமிழில அவனத்தான் 'சான்றோன்' எண்டு சொல்லுறதுங்கோ. 'கிரிக்கெட்' விளையாட்டில முடிவு சொல்லுற 'அம்பயரைப்' போல, வாழ்க்கை விளையாட்டில முடிவு சொல்லுற 'அம்பயர்', அந்தச் சான்றோர்தானுங்கோ. ஆயிரம்பேர் சேர்ந்து கத்தினாலும், அந்த ஒராள் சொல்லுற முடிவைத்தான் உலகம் அங்கீகரிக்குமுங்கோ, அது தெரிஞ்சுதான் அத்தனைபேர் கத்தவும் டெண்டுல்கர் பேசாமல் நிண்டவர். – இப்ப விளங்குதே?' 'ஓமோம் நல்லா விளங்குதுங்கோ.' – அவர் பாவ என்னிலும் தொற்றிக் கொள்ள, நான் என்னையறியாமல் தலையாட்டுகிறேன். 'என்ன விளங்குது?' 'ஆர் கத்தினாலும் கவலைப்படாமல், நான் பேசாமல் என்ட விளையாட்டைத் தொடர வேண்டுமெண்டு.' 'பேந்தென்ன பிடிச்சிட்டீங்கள்? நான் வரட்டே.' ஹா.......... ஹா........ஹா .......... ஹா........

***

இப்போது அவர் சிரிப்பு, சிவனின் சிரிப்பாய் எனக்குப் படுகிறது. கை 'ரிமோட்'டைத் தட்ட, இப்போதும் பிழையான ஒரு 'கச்' பிடித்து, 'அவுட்' கேட்கிறது விளையாட்டுக் கூட்டம். '(ப்)பட்' பண்ணியவன் சலனமற்று நிற்கிறான். – ஞானியாய் அவன்மேல் மதிப்புண்டாகிறது. எந்தப் பதற்றமும் காட்டாமல் நிதானித்து, அவர்கள் கோரிக்கையை நிராகரிக்கிறார் 'அம்பயர்'. ஆண்டவனின் சாயல் 'அம்பயரில்'. மனத்துள் 'பேனாப்' தலை குனிவதாய்த் தோன்ற, 'கிரிக்கெட்' டில் மதிப்புண்டாகிறது. சர்ச்சைக்குரிய அடுத்த கட்டுரைக்காய்ப் பேனாவை எடுக்கிறேன்.

***

# டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு அஸ்வின் அதிக பலம் அளிப்பார்



இந்தியாவில் நடைபெறும் ரி - 20 கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். தொடரின், 13ஆவது அத்தியாயத்துக்கான தயார்ப்படுத்தல்களை, ஒவ்வொரு அணிகளும் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன.

அந்த வகையில் தற்போது ஒவ்வொரு அணிகளும் தங்களின் அணிகளை வலுப்படுத்தும் வகையில், புதிய பயிற்சியாளர்களை நியமிப்பதோடு, திறமையான வீரர்களுக்கும் வலைவிரிக்கின்றன.

இதற்கமைய இதுவரை ஐ.பி.எல். தொடரில் சம்பியன் கிண்ணம் வெல்லாத கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, அண்மையில் அணிக்குள் பல மாற்றங்களை கொண்டு வந்தது.

இதற்கமைய முதற்கட்டமாக இரண்டு வருட ஒப்பந்தத்தில் அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட மைக் ஹெஸ்சன், ஒப்பந்தம் முடிவதற்கு முன்னதாகவே தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இதற்கு பின்னர், அணியின் செயற்பாடு இயக்குநராக இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து ஜாம்பவான் அனில் கும்ப்ளே நியமிக்கப்பட்டார்.

இதற்கிடையில், கடந்த இரு வருடங்களாக, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவராக செயற்பட்டு வந்த அஸ்வினை விடுவிக்க அந்த அணி, தீர்மானித்தது. இதற்கமைய, அவரை தற்போது டெல்லி கெபிட்டல்ஸ் அணி வாங்கியுள்ளது.

இந்த நிலையில் அவரை மனதார வரவேற்பதாக தெரிவித்துள்ள அணியின் தலைமை பயிற்சியாளர் ரிக்கி பொண்டிங், அஸ்வின் குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறிய கருத்துக்கள் இவை –

அஸ்வின் எந்த அணியிலும் இருந்தாலும் அந்த அணிக்குப் பலம் சேர்க்கிறார்.

அதேபோல, டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்கும் அவர் கூடுதல் பலத்தை அளிப்பார். டெல்லி மைதானம், சுழற்பந்துவீச்சுக்குச் சாதகமானது. அஸ்வின் புத்திசாலித்தனமாகப் பந்துவீசி, நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்துவார்' என்று கூறியுள்ளார்.

அஸ்வின் அணித்தலைவராகச் செயற்பட்ட 28 போட்டிகளில், பஞ்சாப் அணி, 12 வெற்றிகளையும், 16 தோல்விகளையும் பெற்றுள்ளது. கடந்த வருடம் 7ஆவது இடத்தையும், இந்த வருடம் 6ஆவது இடத்தையும் பிடித்தது.

இரண்டு வருடங்களிலும் கடைசிக் கட்டத்தில் படுமோசமாக விளையாடியதால் பிளே ஓஃப் சுற்றுக்கு அந்த அணியால் தகுதி பெற முடியாமல் போனது.

இதனால் இந்த வருடம் புது அணி, புதிய பயிற்சியாளர்கள், புது அணித்தலைவருடன் களமிறங்க கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் உரிமையாளர்கள் முடிவெடுத்துள்ளார்கள். இதன் அடிப்படையில் தான் அஸ்வினை தற்போது பஞ்சாப் அணி, டில்லி அணிக்கு விட்டுக்கொடுத்துள்ளது.

பஞ்சாப் அணி, 2018ஆம் ஆண்டு ஐ.பி.எல். ஏலத்தில் அஸ்வினை இந்திய மதிப்பில் 7.60 கோடி ரூபாவுக்கு வாங்கியது. தற்போது, அதே தொகைக்கு அஸ்வினை டில்லி அணி வாங்கியுள்ளது.

டில்லி அணியில் ஏற்கெனவே அக்ஷர் படேல், அமித் மிஸ்ரா, ராகுல் டெவாடியா, ஜலஜ் சக்ஸேனா, மார்கண்டே, சுஜித், சந்தீப் லமிசானே என ஏராளமான சுழற்பந்து வீச்சாளர்கள் உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை 139 ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடியுள்ள அஸ்வின், 125 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். மேலும், 375 ஓட்டங்களை குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# தொடரை கைப்பற்றியது இந்தியா!




பங்களாதேஷ் அணிக்கு எதிரான மூன்றாவது இருபதுக்கு -20 போட்டியில் இந்திய அணி 30 ஓட்டங்களினால் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, மூன்று இருபதுக்கு -20 போட்டி மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியுடன் விளையாடி வருகிறது.

சுற்றுப் பயணத்தில் முதலாவதாக நடைபெற்ற இருபதுக்கு -20 தொடரின் முதல் போட்டியில் பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுகளினால் வெற்றியும், இரண்டாவது போட்டியில் இந்திய அணி 10 விக்கெட்டுக்களினால் வெற்றியும் பெற்றிருந்தது.

இந்நிலையில் இருபதுக்கு - 20 தொடரின் கிண்ணத்தை தீர்மானிக்கும் இறுதிப் போட்டி நாக்பூரில் நேற்று முன் தினம் இரவு 7 மணிக்கு ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி களத்தடுப்பை தேர்வு செய்ய இந்திய அணி முதலில் துடுப் பெடுத்தாடி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெற்களை இழந்து 174 ஓட்டங்களைக் குவித்தது.

175 ஓட்டம் என்ற வெற்றியிலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பங்களாதேஷ் அணி 19.2 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 144 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 30 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவியது.

லிட்டன் தாஸ் 9 ஓட்டத்துடனும், மொஹமட் நைம் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 48 பந்துகளில் 10 நான்கு ஓட்டம், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 81 ஓட்டங்களுடனும் சவுமிய சர்கார் டக்கவுட்டுடனும், மொஹமட் மிதுன் 27 ஓட்டங்களுடனும், முஷ்பிகுர் ரஹிம் டக்கவுட்டுடனும், மாமதுல்லா 8 ஓட்டங்களுடனும், அபிப் ஹுசேன் டக்கவுட்டுடனும், பியுல் இஸ்லாம் 4 ஓட்டங்களுடனும், முஸ்தபிசுர் ரஹ்மான் ஒரு ஓட்டத்துடனும், அமினுல் இஸ்லாம் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க, அல்அமீன் ஹுசேன் எதுவித ஓட்டமின்றி ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் தீபக் சஹார் ஹெட்ரிக் உடன் மொத்தமாக 6 விக்கெட்டுகளையும், சிவம் டுப் 3 விக்கெற்களையும், சஹால் ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 தொடரை 3:2 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

(ஐ)

# சுப்பர் ஓவரில் நியூஸிலாந்தை வீழ்த்தியது இங்கிலாந்து அணி




நியூஸிலாந்து அணிக்கு எதிரான ஐந்தாவதும் இறுதியுமான இருபதுக்கு இருபது போட்டியில் சுப்பர் ஓவர் முறையில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்த போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

மழை காரணமாகப் போட்டி தாமதமாக ஆரம்பித்த நிலையில், அணிக்கு 11 ஓவர் கொண்ட போட்டியாக மட்டுப்படுத்தப்பட்டது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 11 ஓவர்களில், 5 விக்கெட் இழப்புக்கு 146 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

நியூஸிலாந்து அணி சார்பாக, மார்டின் கப்டில் 50 ஓட்டங்களையும், கொலின் முன்ரோ 46 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியும் 7 விக்கெட் இழப்புக்கு 146 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இங்கிலாந்து அணி சார்பாக, ஜொன்னி பெயார்ஸ்டோ 47 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இரு அணிகளும் சம ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றதை அடுத்து சுப்பர் ஓவர் முறை பயன்படுத்தப்பட்டது.

சுப்பர் ஓவரில், முதலாவதாக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 17 ஓட்டங்களைப் பெற்றது.

எனினும், பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 8 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

இந்த போட்டியின் ஆட்ட நாயகனாக ஜொன்னி பெயார்ஸ்டோ தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

குறித்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரை இங்கிலாந்து அணி மூன்றுக்கு இரண்டு என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது.

# கிழக்கு முதலமைச்சராக மீண்டும் பிள்ளையானேதான் வரவேண்டும்

## கருணாவின் விருப்பம் இதுவாம்



மட்டக்களப்பு,நவ. 12

கிழக்கு மாகாண முதலமைச்சராக பிள்ளையானை மீண்டும் கொண்டுவரவேண்டுமெனத் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்தார்.

பெரியபோரதீவில் பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்கும் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

கோட்டாபயவின் ஆட்சிக்காலத்தில்தான் தமிழர்கள் இந்த நாட்டில் நிம்மதியாகவும் பொருளாதாரத்துடனும் பாதுகாப்புடனும் வாழமுடியும்.

இன்று வட, கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும், வருங்கால ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிப்பதற்காக ஒன்றாக இணைந்திருக்கின்றன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மட்டுமே இன்று வெளியே நிற்கின்றது. மேலும் 13 கோரிக்கைகளைச் சம்பந்தர் கொண்டுவந்தபோது அதனை மஹிந்த ஏற்றுக்கொள்ளவில்லை. சஜித்தும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இவர்கள் உண்மையானவர்கள் என்றால் தேர்தலில் இருந்து ஒதுங்கியிருக்கவேண்டும். ஆனால், இன்று கோட்டாபய ராஜபக்ஷவைத் தோற்கடிக்கவேண்டும் என்று கூறிக்கொண்டு சஜித்திடம் சென்றுள்ளனர்.

தமிழர்களை மீண்டும் குழிதோண்டி புதைக்கும் நடவடிக்கையையே அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே நாங்கள் மிகவும் கவனமாகச் செயற்படும் போதே கிழக்கு மாகாண தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாக்க முடியும்.

கோட்டாபய ஜனாதிபதியாக வரும்போதே கிழக்கில் ஆளுநராகவும் முதலமைச்சராகவும் தமிழர் வருவார்கள்.

பிள்ளையான் மீண்டும் முதலமைச்சராக வரவேண்டும். அப்போதே பாரிய அபிவிருத்திகளைக் காண முடியும்.

நல்லாட்சி அரசு என்று கூறிக்கொண்டு மத்திய வங்கியை கொள்ளையடித்தார்கள். அதனைக்கொண்டே இன்று கூட்டத்துக்கு ஆள் சேர்ப்பதற்காக ஆயிரம் ரூபாவும் உணவு பொதியும் கொடுக்கின்றார்கள்.

இது மதுபானத்துக்காகவும் பணத்துக்காகவுமான தேர்தல் அல்ல. கிழக்கு மாகாணத்தில் எங்கள் உரிமையைப் பாதுகாப்பதற்கான தேர்தல் – என்றார். (ஐ)

# மிலேனியம் ஒப்பந்தம் நிறுத்தப்படவேயில்லை

## தயா கமகே கூறுகின்றார்



கொழும்பு, நவ. 12

அமெரிக்காவுடன் கையெழுத்திட்டு முன்மொழியப்பட்ட மிலேனியம் ஒப்பந்தம் திரும்பப் பெறப்படவில்லையென அமைச்சர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தம், நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு அதன் பின்னர் செயற்படுத்தப்படும் எனவும் தயா கமகே கூறினார்.

இதேவேளை மிலேனியம் ஒப்பந்தத்தில், கைச்சாத்திட வேண்டாமென இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதேபோன்று சில கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளபோதும், இன்னும் சில கட்சிகள், குறித்த ஒப்பந்தத்துக்கு தொடர்ச்சியாக எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோட்டாபய, சஜித் ஆகியோரை விவாதத்துக்கு அழைக்கும் அநுர

கொழும்பு, நவ. 12

ஜனாதிபதி வேட்பாளர்களான கோட்டாபயராஜபக்ஷமற்றும்சஜித்பிரேமதாஸ ஆகியோரைத் தன்னுடன் விவாதத்துக்கு வருமாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர், இருவரின் ஆளுகை தொடர்பான கொள்கைகள் குறித்து விவாதத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்கு முன்னர் தான் இவ்வாறு அழைப்பு விடுத்தார் என்றும், ஆனால் இருவரும் பதிலளிக்கவில்லை எனவும் அநுரகுமார குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை நிர்வகிக்கக்கூடிய கொள்கைகள் அவர்களிடம் இருக்குமாயின் ஏன் பேசப் பயப்படுகிறார்கள் எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (ஐ)

# கோட்டாபயவுக்கு அவதூறு; அமைச்சரின் செயலர் கைது!

கொழும்பு, நவ. 12

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக அவதூறுச் சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்த குற்றச்சாட்டில் அமைச்சர் ஹர் டி சில்வாவின் செயலாளர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவரையும் விசாரணைகளின் பின் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வெலிக்கடை சிறை கூரை மீதேறி கைதிகள் இருவர் உண்ணாவிரதம்

கொழும்பு, நவ. 12

வெலிக்கடை சிறைச்சாலையின் கூரை மீதேறி கைதிகள் இருவர் உண்ணாவிரதப்போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட ராஜகிரிய றோயல் பார்க் கொலையாளிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியமைபோல தங்களுக்கும் வழங்கப்படவேண்டுமென கேட்டே கைதிகள் இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# மைத்திரியை பாராட்டிய ஹரீன்!

கொழும்பு, நவ. 12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்குபற்றிய கடைசி அமைச்சரவைக் கூட்டம் நேற்றுக் காலை நடைபெற்றது.

அமைச்சரவைக் கூட்டங்கள் வாராந்தம் செவ்வாய்க்கிழமைகளில் நடப்பது வழக்கமாக இருந்த போதும், இன்று விடுமுறை என்பதால் நேற்றுக் கூட்டம் இடம்பெற்றது.

அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தனது டுவிற்றர் பக்கத்தில், வேறுபாடுகள் இருந்த போதிலும், 2015 இல் தெரிவாகும் போது ஒரு முறை மட்டுமே வேட்பாளராக இருப்பேன் என்ற வார்த்தையின்படி நடந்த ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

2018 இல் பல எதிர்ப்புக்கள் இருந்தபோதும், மைத்திரியின் ஆட்சியில் ஜனநாயகம் மீட்கப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)



# பலாலி ஊடாக சென்னைக்கு பயணமானார் வடக்கு ஆளுநர்





யாழ்ப்பாணம், நவ. 12

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் சென்னை நகரத்துக்கு நேற்று முதலாவதாகப் பயணித்த எயார் இந்தியா நிறுவனத்தின் ஏ.ஐ. 9102 பயணிகள் விமானத்தில் வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் சென்னைக்குப் பயணமானார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடான பயணிகள் விமான சேவையை எயர் இந்தியாவின் துணை நிறுவனமான அலையன்ஸ் எயர் நிறுவனம் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது. இதன்போது யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிகள் பலர் சென்னைக்கு விமானத்தில் பயணித்தனர். இவர்களோடு வடக்கு மாகாண ஆளுநரும் விமானத்தில் சென்னைக்குப் பயணமானார்.

இரு நாடுகளுக்குமிடையில் புதிய உறவுகளையும் புதிய வர்த்தகத் தொடர்புகளையும் இந்த விமான நிலையத்தினூடாக உருவாக்க முடியும் என்றுதான் எதிர்பார்க்கிறார் என ஆளுநர் சுரேன் ராகவன் இதன்போது குறிப்பிட்டார். (ஐ - 07)

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு கோட்டா பொறுப்புக் கூறவேண்டும்

### கொழும்பில் மக்கள் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, நவ. 12

இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதலுக்கு பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பு கூற வேண்டுமெனகோரிப்போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

தொடர் குண்டுத்தாக்குதலுக்கு கோட்டாபயதான் காரணமெனக் கூறும் வகையில் பதாகைகளையும் ஏந்தி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)

## மஹிந்தவின் கூட்டத்துக்கு சென்றோருக்கு மதுபானம்!

முல்லைத்தீவு, நவ. 12

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும், பொதுஜன பெரமுன வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவான பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசபை மைதானத்தில் இடம்பெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பஸ்களில் அழைத்து வரப்பட்டவர்களுக்கு மதுபானப் போத்தல்கள் வழங்கப்பட்டன.



பிரசாரக் கூட்டம் முடிந்த கையோடு முல்லைத்தீவு நகர கடற்கரையில் ஒவ்வொரு பஸ்களுக்கும் தலா 5 மதுபானப் போத்தல்கள் வழங்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது .

மதுபானப் போத்தல்கள் வழங்கலில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக முல்லைத்தீவு நகரக் கடற்கரைக்கு அண்மையாகச் சில குழுக்கள் வாக்குவாதங்களில் ஈடுபட்டன. அத்தோடு பொது இடங்களான கடற்கரை மற்றும் வீதிகளில் வைத்து மதுபானத்தை அருந்திய சம்பவங்களையும் அவதானிக்கமுடிந்தது . (ஐ)

## தமிழர்களுக்காக வீரவன்ஸ தியாகம் செய்யத் தயாராம்!

கொழும்பு, நவ. 12

தமிழ் மக்களுக்காக விசேட தியாகங்களைச் செய்வதற்குத் தயாராக இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியில் தமிழ் மக்களின் முழுமையான பங்களிப்பு இருக்கவேண்டும். நிறைவேற்ற முடியாத ஐந்து காரணிகளில் தமிழ் – சிங்கள மக்கள் மோதிக்கொள்வதை விடவும் முடியுமான நூறு விடயங்களில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்கவேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## குறிசுட்டகுளம் காட்டிலிருந்து இளைஞன் சடலமாக மீட்பு!

வவுனியா, நவ. 12

வவுனியா கனகராயன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறிசுட்டகுளம் பகுதியில் நேற்று முன்தினம் காணாமற்போன இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவனான பாலசுப்பிரமணியம் தர்மிலன் (வயது -23) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

தர்மிலன் நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் குறிசுட்டகுளம் பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டிலிருந்து தடி வெட்டுவதற்காகக் காட்டுப் பகுதிக்குச் சென்றுள்ளார்.

எனினும் நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை.

இந்த நிலையில் அவரது பெற்றோர்களால் கனகராயன் குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

அவர் காலை சென்றதாகத் தெரிவிக்கப்படும் காட்டுப் பகுதியில் இளைஞர்கள் தீவிர தேடுதல் நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் இளைஞன் நேற்று முற்பகல் சடலமாக மீட்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்பில் கூட்டமைப்பும் பொறுப்பு கூறவேண்டும்!

## சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்தல்



வவுனியா, நவ. 12

வெள்ளைவான் கடத்தல்களுக்கு சாட்சிகளிருந்தும் இதுவரையில் எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்காதிருந்தமைக்கு அரசும் அதன் பங்காளியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பொறுப்பு கூற வேண்டுமென ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சர் ராஜித சேனாரத்னவின் ஊடக சந்திப்பில் வெள்ளைவான் கடத்தல்களும் படுகொலைகளும் இடம்பெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் தற்போதைய ஆட்சியாளர்களும், கூட்டமைப்பு ஆதரிக்கும் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸவும் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பகிரங்கப்படுத்துமாறும் அவர் கோரியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் விடுத்துள்ள மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

அமைச்சர் ராஜித சேனாரத்னவின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது வெள்ளைவான்களில் சாரதியாகப் பணியாற்றியவர்களில் ஒருவரான அந்தோனி பெர்ணான்டோ மற்றும் கடத்தப்பட்டு விடுதலையான அத்துல மதநாயக்க ஆகியோர் பங்கேற்று வெள்ளைவான் கடத்தல்கள், மற்றும் சித்திரவதை முகாம்கள், சித்திரவதைகள், படுகொலை செய்யப்பட்ட 300 பேரை முதலைகளுக்குப் பலியிட்டமை உள்ளிட்ட பல தகவல்களை வெளியிட்டனர்.

இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும், பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளருமான கோட்டாபயவின் கீழ் இராணுவ அதிகாரிகளின் பங்களிப்புடன் இயங்கிய அணியொன்றால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெளிவாகக் கூறியுள்ளனர்.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் இதுபோன்ற பல விடயங்களைத் தமிழ் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளும் கூறியபோதும் அதற்கான சாட்சியங்கள் இருப்பது தொடர்பில் தெரிவித்தபோதும் அந்த விடயங்களைக் கருத்திலேயே கொண்டிருக்காத ராஜித சேனாரட்ன திடீரென இவ்வாறான சாட்சியங்களை தனது ஊடகவியலாளர் சந்திப்புக்கு அழைத்து வந்தமையின் பின்னணி என்ன?

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருக்கு இவ்வாறான மிலேச்சத்தனமான விடயங்கள் தொடர்பாக எம்மால் கூறப்பட்டும் தனிப்பட்ட முறையில் அவருக்குத் தெரிந்திருந்தும் இதுநாள் வரை வெளிப்படுத்தாமையும், நடவடிக்கைகள் எடுக்கப்படாமையும் தொடர்பில் அவர் பங்கேற்றிருந்த அரசும், அதற்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பொறுப்புக் கூறவேண்டியது தார்மீகக் கடமையாகும்.

எமது கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் திருகோணமலை கடற்படை முகாமில் நிலத்தடி சித்திரவதை முகாம் இருந்தமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியபோது அவ்வாறான எந்தவொரு விடயங்களும் இருக்கவில்லையென்று மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. அதுதொடர்பில் உள்ளக விசாரணை ஒன்று கூட முன்னெடுக்கப்படவில்லை.

பின்னர் ஐ.நா. குழு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டு திருமலையில் சித்திரவதை முகாம் இருந்தமை குறித்து உறுதிப்படுத்தியிருந்தபோதும் அது தொடர்பிலும் எவ்விதமான நடவடிக்கைகளையும் அரசு எடுத்திருக்கவில்லை. குறைந்தபட்சம் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டத்தில் இவ்வாறானதொரு பாரதூரமான விடயமொன்று இருப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதனைப் பொருட்டாக கொண்டு ஆட்சியாளர்களுக்கு நெருக்கமாக இருந்துவருகின்ற சூழலைப்பயன்படுத்தித் தனது கருமங்களை முன்னெடுத்திருக்கவில்லை

கொழும்பில் ஐந்து மாணவர்கள் உட்பட பதினொரு பேர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நீண்ட விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் தற்போது அவர்கள் நிலத்தடி முகாமில் இயந்திரத் துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு போரின் இறுதியல் சரணடைந்தவர்களும், விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்களும் இன்னமும் வீடு திரும்பாத நிலைமையே நீடிக்கின்றது. அதற்கான சாட்சியங்களும் தற்போதும் உயிருடன் உள்ளன.

அவ்வாறு வலிந்து காணாமல்போகச் செய்யப்பட்டவர்களுக்கு ஆட்சியாளர்கள் உரிய விசாரணைகளை முன்னெடுத்து பொறுப்புக் கூறவேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் கடந்த மஹிந்த அரசும் சரி தற்போதைய அரசும் சரி மறுதலிப்புக்களையும், காலம் கடத்தும் நடவடிக்கைகளையுமே மேற்கொண்டு வந்தது.

அதனைவிடவும் இத்தகைய சம்பவங்களுடன் தொடர்புடைய படையினர் கைதுசெய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டாலும் சொற்ப காலத்தில் அந்த வழக்குகளை நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்களுக்கும், கொழும்பு, அனுராதபுர நீதிமன்றங்களுக்கும் மாற்றி குற்றமிழைத்ததாக அவர்களை நீதிமன்றத்தின் ஊடாகச் சாணக்கியமாக விடுவித்தே வந்துள்ளது.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் வெள்ளைவான் கடத்தல்கள், சித்திரவதை முகாம்கள், காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று உள்நாட்டிலும் வெளிநாட்டில் யஸ்மின் சூகா அம்மையார் போன்றவர்களும் சான்றாதாரங்களுடன் வலியுறுத்தியபோதும் கடந்த நான்கரை வருடங்களில் எவ்விதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

மாறாக மஹிந்த ஆட்சியில் நடைபெற்ற மனித குலத்துக்கு எதிரான மிலேச்சத்தனங்களைப் பாதுகாக்கும் செயற்பாட்டையே தற்போதைய ஆட்சியாளர்கள் மேற்கொண்டதோடு படைத்தரப்பில் இவ்விடயங்களில் தொடர்புபட்டுள்ளவர்களை குறைந்தபட்சம் விசாரணைக்கு உட்படுத்துவதற்குப் பதிலாக அவர்களை உயர்பதவிகளில் அமர்த்தி அழகு பார்த்தனர்.

நீதியை வழங்காது மிலேச்சத்தனங்களைச் செய்தவர்களுக்கு துணைபோகும் ஆட்சியாளர்களுக்குப் பங்காளிகளாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தையும் மலினப்படுத்தியதோடு நின்றுவிடாது அதற்கும் ஒருபடி மேலே சென்று ஆட்சியாளர்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்காக கால அவகாசமும் பெற்றுக்கொடுத்தது. இந்தச் செயற்பாட்டை மேற்கொண்டமையை நினைத்து ஆணை வழங்கிய மக்கள் முன்னிலையில் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

தமிழின அழிப்பின் ஓர் அங்கமாக நடைபெற்ற வெள்ளைவான் கடத்தல்கள் மற்றும் படுகொலை தொடர்பில் தற்போது பகிரங்கமாகியுள்ள நிலையில் உடனடியாக குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையும், சர்வதேச தரப்பினரும் உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் உடனடியான தலையீட்டினை செய்து அது பற்றி அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு அழுத்தமளிக்க வேண்டும்.

நீதிக்கு எதிரான அடக்குமுறைகள் மற்றும் சித்திரவதைகளால் எமது இனத்தின் படுகொலைகளையும், அவலங்களையும் தேர்தல்களில் வாக்குச் சேர்ப்பதற்கு பயன்படுத்துவதற்குப் பதிலாக அவை தொடர்பில் விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இதுபற்றி நிபந்தனையற்ற ஆதரவளிக்கும் தரப்புக்கள் சிந்திக்க வேண்டும்.

கூட்டமைப்பு ஆதரவளிக்கும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தனது கழுத்தைக் கொடுத்தவது இராணுவத்தைக் காப்பாற்றுவேன் என்று தென்னிலங்கை தேர்தல் மேடைகளில் முழக்கமிட்டு வருகின்ற நிலையில் இந்த மிலேச்சத்தனம் குறித்த நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்துவரா? இல்லை கூட்டமைப்பாவது அவரிடத்தில் பொறுப்பான பதிலொன்றை பெற்று கூறுமா? – என்றுள்ளது.

(ஐ – 100)

# கோட்டா வெல்வார் என்ற அச்சத்தால் அவர் மீது பொய்க் குற்றச்சாட்டுக்கள்!

## ராஜிதவைச் சாடுகிறார் மஹிந்தானந்த

கொழும்பு, நவ. 12

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெறுவார் என்ற அச்சத்திலேயே அவர் மீதான பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதாக மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கிருலப்பனையில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் ராஜித சேனாரட்னவின் தலைமையில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிகாலத்தில் இடம்பெற்ற வெள்ளை வான் கடத்தல் விவகாரத்தின் பிரதான சூத்திரதாரியாகச் செயற்பட்டவர் கோட்டாபயவே என்றும், இதன்போது சுமார் 300 பேர் வரையில் கடத்தப்பட்டுச் சித்திரவதைகளுக்கு உட்படுத்தி கொல்லப்பட்டுள்ளனர் என்றும் வெள்ளை வான் ஒன்றின் சாரதியாகப் பணியாற்றினார் எனக் கூறப்படும் ஒருவர் தெரிவித்தார்.



இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்ட மஹிந்தானந்த அளுத்கமகே,

வெள்ளைவான் கடத்தல் தொடர்பான தகவல்கள் அறிந்ததும் அமைச்சர் ராஜித சேனாரட்ன அந்தச் சந்தேகநபரை பொலிஸில் ஒப்படைத்திருக்க வேண்டும். அதைவிடுத்து இவ்வாறு ஊடக சந்திப்பை நடத்தியிருக்கக்கூடாது – என்றார்.

(ஐ)

# வடமாகாண
# மரநடுகை மாதம்
## கார்த்திகை 1 - 30, 2019

**கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல, தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்**




**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**

**TAMIL NATIONAL GREEN ORGANIZATION**




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.11.2019 இல் வெளியிடப்பெற்றது.